T-UN-431

# தமிழ்ப் பொழில்

## தமிழாராய்ச்சித் திங்களிதழ்

5.7.177

துணர்: 58 மலர்: 7

துணர் : 58 : **உள்ளுறை** : மலர் : 7

1. **ஆய்வுக் களத்தில் "அந்தப்புரம்"** .... 321
டாக்டர். ஏ. என். பெருமாள்,
எம் ஏ., பி. டி., பிஎச். டி.,
பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு,
சென்னை.

2. **தமிழ்–ஆங்கில வினா வகைகள்**
**ஓர் ஒப்பீடு** .... 339
வீ. ரேணுகாதேவி,
ஆய்வாளர், மொழியியல் துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

3. **கோழியூர்க் கோவலர்** .... 347
டாக்டர் இரா. கலைக்கோவன்,
எம். பி. பி. எஸ்., டி. ஓ.,
கண் மருத்துவர், திருச்சி.

4. **கற்பனையால் ஆம் கட்டு** .... 353
டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.

5. **மலை வாழ் மக்களின் மொழி–கூவிமொழி**.... 363
டாக்டர் மோ. இசரயேல், எம். ஏ., பிஎச். டி.,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை.

தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2015

துணர் : 58 இரத்தாட்சி — ஐப்பசி மலர் : 6

அக்டோபர் — நவம்பர் 1984

## ஆய்வுக் களத்தில் "அந்தப்புரம்"

டாக்டர். ஏ. என். பெருமாள்,
எம். ஏ., பி. டி., பி. எச். டி.

### அறிமுகவுரை

சோழர் வரலாற்றுப் பின்னணியில் ஆசிரியர் தாமரைமணாளனுடைய எழுத்தாற்றல் தமிழுக்குப் படைத்துக் கொடுத்த தரமான நாவலாக 'அந்தப்புரம்' விளங்குகிறது. வரலாற்றோடு இணைந்த மாந்தர், நிகழ்ச்சிகள், பின்புலம் ஆகியவற்றை அழகாக இணைத்து

முன் நடப்புக்கு முரண்படாத முறையில் சுவை ததும்ப எழுதப்படும் நாவல்கள் வரலாற்றுச் சிறப்புடன் மதிக்கப்படுகின்றன. கல்கியினுடைய 'பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன்' ஆகியவை தமிழில் எழுந்துள்ள வரலாற்று நாவல்களுக்கு முன்னோடியாக அமைந்துள்ளன. அவற்றுக்கு முன்னர் எழுதப்பட்டுள்ள மனுநீதி முறை செலுத்திய சோழனின் கதையைப் பின்பற்றிய 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற நூலும், சரவணமுத்துப் பிள்ளையின 'மோகனாங்கி' என்பதும் வரலாற்று நெடுங்கதைகளாகும். கல்கியின் பேனாவின் படைப்புத்திறன் வரலாற்று நெடுங்கதைகளுக்குப் புது மெருகும் இலக்கியப் பொலிவும் ஊட்டியது. கற்பனைத்திறன் மிஞ்சியதால அவை வரலாற்றுப் புனைவுகளாக மலர்ந்துள்ளன. கல்கியை அடுத்துப் பல ஆசிரியர்கள் வரலாற்று நாவல்களை எழுதித் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனர். அவற்றில் ஒன்றாகத் தாமரைமணாளனுடைய அந்தப்புரத்தை உறுதியாகக் கருதி ஆராயலாம்.

சமூக நாவல்களைப் பின்னிப் பழக்கப்பட்ட தாமரைமணாளனுடைய கரங்களை ஆசிரியர் மணியன் வரலாற்றுக் களத்தில புகுந்து விளையாடத்தூண்டியுள்ளார்.[1] இதிலிருந்து இந்த நாவல் அகவெழுச்சியில் பிறக்காது புறத்தூண்டுதலால் உருவாகியுள்ளது என்பதை அறிய முடிகிறது. இந்த உண்மையைக் கூறும் நூலாசிரியரின் பின்னுரையைப் படிப்பதற்கு முன் நாவலைப் படித்து முடித்துவிடும் நமக்கு இப்படைப்பு ஓர் அகவெழுச்சி இலக்கியச் செல்வமாகத் தோன்றுகிறதே தவிரப்புறத் தூண்டலால் தோன்றிய அரைகுறைப் பிறப்பாகத் தோன்றவில்லை. அறியாது அடங்கிக் கிடந்த திறமை தட்டி எழுப்பப்பட்டவுடன் வேகப் பாய்ச்சலாக எழும்பி வரலாற்று அறிவைப் பெருக்கி இந்த வரலாற்று நாவலைப் பக்கம் பக்கமாக எழுதி நிறைவு கண்டதாகக் கருதலாம். இந்த நாவலுக்காகத் தூண்டுகோலுக்கு நன்றியும் எழுதுகோலுக்குப் பாராட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்,

## தலைப்பின் தகுதி :

நாவலின் தலைப்பு நவிலப்படும் கதைப்பொருளுக்குப் பொருத்தமாக அமைந்து அதிலுள்ள வரலாற்றுப் பின்னணிக்கு வலிமை கூட்டுவதாக உள்ளதா என்பதைச் சிந்தித்து உணர வேண்டும். இந்த நாவலில் அரசனின் அவையைவிட அரசியின் அந்தப்புரத்துக்கே சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப்புரம்

1. தாமரைமணாளன், அந்தப்புரம், பின்னுரை, வானதி பதிப்பகம் (சென்னை 1981) பக். 559.

ஆட்சி நிலையில் ஆற்றலுடன் விளங்குவதாக அரசனே ஒப்புக் கொண்டு பேசுவதை நாவலில் காணலாம்.

'சோழமண்டலத்தைப் பாதிக்கும் ஒரு சக்தி உருவாகியிருக்கிறது. அதற்கு ஒருபடை! அதுதான் அந்தப்புரப்படை. அவர்கள் ஆட்சி நிருவாகத்தில் பல விசித்திர பாதிப்புக்களை உருவாக்கி வருகிறார்கள். சோழமண்டலமே இதுவரைக்கண்டிராத புதுமை' என்றும் (பக். 211)

'இந்த ஆட்சியை ஒட்டியும் எதிர்த்தும் எழுந்திருக்கும் சக்திகளின் பின்புலத்திலிருக்கும் ஆற்றல் அனைத்துமே மாதர்களுடைய ஆற்றலாக இருக்கிறது' என்றும் (பக். 211) சோழமன்னன் இராசாதிராச தேவர் மாதங்கியிடம் கூறுவது நாவலின் தலைப்பின் பொருத்தத்துக்கு உறுதி பயப்பதாக அமைகிறது.

ஆண் பாத்திரங்களான சோழமன்னன் இராசாதிராசன், இளவரசன் வீரராசேந்திரன், அரசவை குரு ஞானசிவனார், காளிமாகண்டர் ஆகியோரைவிடவும் பெண் பாத்திரங்களான நெறியுடைப் பெருந்தேவி, புவனமாதேவி, மாதங்கி, சந்திரசேனா, வானமல்லிகா ஆகியோர் நாவலாசிரியனின் பேனாவால் சிறப்பாகவும் உயர்வாகவும் உருவாக்கப்பெற்றுள்ளனர். மேலும் அறிவாற்றல், செயல்திறன், சிந்தனைச்சிறப்பு, வீரமுகிழ்ப்பு, காதல் பிடிப்பு ஆகிய நற்பணிகளில் பல பெண்கள் ஆண்களை விடவும் மேம்படுகின்றனர். கபட நாடகம், சூழ்ச்சித்திறன் போன்ற தீய பண்புகளிலும் சில பெண்கள் சிறப்புற்று விளங்கி ஆண்களை ஏமாற்ற முயல்கின்றனர். பெண்களின் பேராற்றல் அந்தப்புரத்துக்குள் அடங்காது அரசவையிலும் அருங்கானிலும் அஞ்சாது அருஞ்செயல் புரிவதை நாவலில் பரக்கக்காணலாம்.

'இந்தச் சோழநாட்டில் உட்பகைக் கேந்திரமே பழையாறை அரண்மணைக்குள்தான் அமைந்திருக்கிறது' (பக். 338) என்று பெரிய பிராட்டி கூறுவது நாவலின் தலைப்பை வலிமையுடன் பொருத்திக்காட்டுவதாகும். அந்தப்புரத்து மகளிர் அங்கு அடங்கி இராது அரசியல்காரணமாக வெளியேறிச் செயல்படுவதை ஆசிரியர் மிகச்சிறப்பாக ஒருபணிப்பெண்ணின் வாயுரையாகக்கூறுகிறார். 'மூலஸ்தானத்துத்தெய்வம் உற்சவராக மாறிஉலாச் சென்று விட்டது, (பக். 330) என்ற கூற்றில் நெறியுடைப்பெருந்தேவியின் உயரிடமும் செயல்திறனும் சிறப்பாக விளக்கப்பட்டுவிடுகின்றன.

அந்தப்புரத்தைக் கட்டுப்படுத்த முயலும் நாவல் தலைவனான வீரராசேந்திரன் பெருந்தேவியின் வருமுன் காக்கும் செயல்திறனுக்கு முன்னால் ஏமாற்றத்துடன் தலைகவிழ்கிறான். போலி இளவரசனை உருவாக்கி உலகை ஏமாற்ற விரும்பும் பேரரசனும் அரசவைக் குருவும் அரசமாதாவின் குரலுக்கு அடங்கி அரசவையின் முன் பேச்சுமூச்சற்று நிற்கின்றனர். ஈழத்துப்படைத் தலைவன் ருத்ர சிங்கன் வீரநங்கை சந்திரசேனாவின் அதட்டொலிக்கு அடங்கி அவளுடைய ஆதரவை நாடிப் பணிகிறான். ஆண்களிடம் திறமை யாகப்பேசி அவர்களிடமிருந்து வாக்குறுதிகளைப்பெற்று அவற்றின் பயனாக ஆண்களை உரிமையுடன் செயலாற்ற விடாது தடுக்கும் பெண்களின் திறமை பல காட்சிகளாக இந்த நாவலில் படர்ந் துள்ளது. அனைத்துக்கும் மேலாக அந்தப்புரத்தில் ஆணைத் தலைவியாக அறிமுகப்படுத்தப்பெறும் நெறியுடைப் பெருந்தேவி யின் நேர்மைத் திறனும் ஆக்கச் சிந்தனைகளும் அரிய கருத்துரை களும் நாவலின் செயலோட்டத் திருப்பங்களுக்கு முக்கிய காரணங் களாக விளங்குகின்றன.

பெருந்தேவியின் சிறப்பை நாவல் தலைவனான வீரராசேந்திர னின் வாயிலாக நாவல் ஆசிரியர் மிகத் திறமையாக விளக்கி விடு கிறார். 'சாம்ராஜ்யங்களில் பல தர்மங்கள் முறை பிறழ்வதற்கு அந்தப்புர பெண்களே காரணமாக இருந்ததை மாற்றி அந்தப் புரத்தை ஓர் அறநெறிக் கோட்டமாக மாற்றிய மாதரசி தாங்கள்' (பக். 557) என்று நாவலின் இறுதியில் வீரராசேந்திரன் உறுதிப் படுத்திக் கூறுவது நூலின் மையக்கருத்தை ஐயத்திற்கு இடமின்றி வெளிப்படுத்திக் காட்டுவதாகும். நாவலின் வளர்ச்சிப்போக்கிலும் நிகழ்ச்சிப் பின்னலிலும் தலைப்பின் பொருத்தத்தைக் காரண காரியங்களுடன் ஆசிரியர் விளக்கி விடுகிறார்.

## வரலாற்றுக் கூறுகள்

அந்தப்புரம் நாவல் நிகழ்ச்சிகள் சோழநாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்தவை ஆகும். இரண்டாம் இராசாதிராசன் சோழநாட்டை கி.பி. 1163 முதல் 1178 வரை ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகிறது. இக்கால கட்டத்தில் 1175 முதல் 1178 வரை உள்ள மூன்று ஆண்டுகளில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் இந்த நாவலில் இடம் பெறுகின்றன. அவற்றைத் திரட்டி, முறைப் படுத்தி, கற்பனைச் சாற்றில் கனியச் செய்து இனிய நாவலாகத் தாமரைமணாளன் தந்துள்ளார்.

இராசாதிராசன் முந்திய சோழ மன்னனான இரண்டாம் இராச ராசனின் நேரடி வாரிசாக அமையாது மருமகனாக உள்ளான்;

கங்கைகொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த நெறியுடை பெருமாளின் மகனென்று வரலாறு கூறுகிறது[2]. ஆனால் நாவலில் வேங்கி நாட்டைச் சேர்ந்த கீர்த்திவர்மனின் மகனாக குறிக்கப்படுகிறான். நாவலில் வரும் அவனுடைய தாயின் பெயரான நெறியுடைப் பெருந்தேவி வரலாற்றில் வரும் தந்தையின் பெயரான நெறியுடைப் பெருமாளுடன் பொருந்துவது சிந்தனைக்கு உரியதாகும்.

வரலாற்றுச் சான்றுகளை இடையிடையே ஆசிரியர் சுட்டிச் செல்வது அவரது 'தடம் புரள விரும்பாத தன்மையைக்' காட்டு கிறது. இராசாதிராசனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றான 'திரிபுவனசக்கரவர்த்தி கரிகால சோழ தேவரான இராசதிராச சோழன்' என்பதை நயமாக ஆதாரத்துடன் குறிப்பிடும் ஆசிரியர்[3] அம் மன்னனின் இன்னொரு பட்டப் பெயராகச் சிதம்பரம் கல்வெட்டு[4] கூறும் 'இராசாதிராச தேவராகிய கரிகால சோழதேவர்' என்பதைச் சுட்டிக் காட்டவே இல்லை. முன்னதில் நாவல் பாத்திரப் பெயரான 'இராசாதிராச சோழன்' முடிவுப் பெயராகிச் சிறப்புப் பெறுவதே அதற்குக் காரணமாக இருக்கலாம். இதேபோன்று தாராசுரம் என்ற இடத்துக்கு 'இராசராசேசுவரம்' என்ற பெயர் இருந்ததற்கும் சான்று தருகிறார்.[5] இத்தகைய வரலாற்று உண்மைகளைச் சான்றுகாட்டி நிறுவி, தான் கூறும் கதையின் வரலாற்றுப் பிடிப்பை வலியுறுத்த ஆசிரியர் முயல்வது பொருத்தமாகவே அமைகிறது. வரலாற்று உண்மைகளே கதையின் மூலங்கள் என்பதை நயமாக உணர்த்தும் உத்தியாக இத்தகைய 'சான்று காட்டி நிறுவும் போக்கைக்' கருதலாம்.

முன் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை உண்மைக்கு ஊறு நேராது உரிய சான்றுகளுடன் எடுத்துக் கூறுவது வரலாறாகும். வரலாற்று கருத்துக்களைக் காலவுணர்வுக்கு அடங்கிக் கற்பனைப் பூச்சுகளால் ஒப்பனை செய்து பல்வேறு சுவைகளை, அளவோடு கலந்து இலக்கியக் கலைச்செல்வமாகப் படைத்துத் தருவது வரலாற்று நாவலாகும். தாமரைமணாளனின் 'அந்தப்புரம்' வரலாற்று உண்மைகளை எந்த அளவுக்கு எந்த முறையில் தன்னுள் அடக்கி

---

2. (i) சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (1967) பக். 129.
   (ii) K. A. Nilakanta Sastri, The Colas, University of Madras (1975) P.356
3. (i) அந்தப்புரம், பக்- 477.
   (ii) K. Nilakanta Sastri, The Colas, P, 372.
4. Ins. 263 of 1923.
5. அந்தப்புரம், பக், 4.

யுள்ளது என்பதை அகழ்ந்து ஆராய்வது பயனுடைய அறிவாக்க முயற்சியாகும். நாவலின் போக்கில் வரலாற்று உண்மைகள் இணைந்துள்ள முறை, அவற்றை வரிசைப்படுத்திக் காட்டும் அமைப்பு, கையாண்டுள்ள உத்திகள், கற்பனைக் கலவைகள், பயன்படுத்தியுள்ள மொழிநடை, புலப்படுத்தியுள்ள சமூகம், சமயம், அரசியல், பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றின் இயல்புகள் முதலியவற்றை நன்கு அறிதல் வேண்டும். கற்பனைப் பெருக்கில் உண்மை உருமாறி அமைந்துவிடுமானால் நாவல் வரலாறு என்று அழைக்கப்படும் தகுதியை இழந்துவிடும். இவற்றைக் கருத்தில் கொண்டு அந்தப்புரத்தை ஆராயலாம்.

இரண்டாம் இராசராசனுக்கு இரண்டு குழந்தைகள் இருந்த தாகவும் அவர்களில் இளையவனான வீரராசேந்திரன் கொடும்பாளூர் மூவேந்த வேளார் அரண்மனையில் வளர்க்கப் பட்ட தாகவும், மூத்தவன் பற்றிய செய்தி மறைவாக இருப்பதாகவும் நாவலின் தொடக்கத்தில் விளக்கப்படுகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்லவராயன்பட்டிக் கல்வெட்டில் மிகத் தெளிவாக ஒன்றும் இரண்டும் வயதுள்ள இராசரரசனின் இரு மக்களைப் பல்லவராயர் என்ற உயர் அதிகாரி காப்பாற்ற வேண்டிய பொறுப்புடையவர் என்று கூறப்பட்டுள்ளது.[6]

எதிரிலிப்பெருமாள் என்ற இராசாதிராசன் உண்மையில் விக்கிரம சோழனின் மகளின் மகன்தான் என்று உறுதியாகக் கூறாது பெயரன் என்ற குறிப்புடன் வரலாறு ஒதுங்கிக் கொள் கிறது.[7] ஆனால் இந்த நாவல் இராசாதிராசனை முந்திய அரசனான இராசராசனின் உடன் பிறந்த சகோதரியாகிய நெறியுடைப் பெருந்தேவியின் மகன் என்று உறுதியாகக் கூறித் துரிதமாக முன்னேறுகிறது. வரலாறு ஐயமாகக் கொள்வதை நாவல் உண்மையாக உறுதி செய்து கொண்டு உலகுக்கு அறிவிப்பதை ஆசிரியரின் 'படைப்பு உரிமை' என்று கருதலாம். நாவலில் கூறியவற்றை மறுத்துக் கூறும் சான்றுகள் வரலாற்றில் இல்லை என்பதையும் அறிதல் வேண்டும்.

இராசாதிராசன் முடி புனையுபோது உட்பூசல்கள் மூட்டங் கொண்டிருந்ததாகவும் அதன் பயனாக மறைமுகச் சிக்கல்கள்

---

6. (i) இரண்டாம் இராசாதிராச சோழனது பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு (Ins. 433 of 1924)

(ii) K. A. Nilakanta Sastri, The Colas, P. 356,

7. Ibid, P. 357.

ஆட்சிப் பொறுப்பிலிருந்த மன்னனுக்கு இருந்ததாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது.[8] வெங்கலராவ் என்ற வரலாற்று ஆசிரியர் இந்தக் கல்வெட்டுச் சான்றை அடிப்படையாகக் கொண்டு சில உண்மைகளை விளக்குகிறார்.[9] இராசாதிராசன் ஆட்சிக் காலத்தி லிருந்த சிக்கல்களை அமைச்சர் ஒருவர் தன் அறிவுத்திறனால் தீர்த்து இளவரசரை அரசராக்கியதாக இந்த வரலாற்று ஆசிரியர் நிறுவுகிறார். அதே சமயம் மூன்றாம் குலோத்துங்கனாகிய வீரராசேந்திரன் முந்திய அரசனான இரண்டாம் இராச ராசனுடைய மகனாக இருக்க முடியுமா என்ற ஐயமும் வரலாற்று ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது.[10] ஆனால், நாவலாசிரியர் இத்தகைய ஐயங்களை எல்லாம் புறக்கணித்து இராசராசனுடைய இரண்டாவது மகனாக வீரராசேந்திரனைத் திடமாக நம்பிக் கதையைக் கட்டி வளர்க்கிறார். இந்த உறுதியில்தான் நாவலின் ஆணிவேரே இறங்கி வலுவேறியுள்ளது. படைப்பாசிரியரின் உரிமையில் வரலாறு ஆதிக்கம் செலுத்த விரும்பக் கூடாது. இருப்பினும், அத்துமீறிய உரிமை வருங்கால வரலாற்று ஆய்வுக்கு ஆபத்தாக அமைந்து விடக் கூடாது. கூடியவரை துணையாக அமைந்து ஆய்வுக்குத் தகுந்த பொருளாக வரலாற்று நாவல்கள் விளங்குவது அவற்றின் தரத்தைக் கூட்டுவதாகும் என்பதை ஆசிரியர்கள் மறந்து தங்கள் பேனாவை முறையில்லாது விரட்டக் கூடாது. அத்தகைய உரிமை வேகம் வரலாற்றை மங்கச் செய்து விடுவதால் நாவலின் சிறப்பு மழுங்கித் தோன்றுவது உறுதி.

பாண்டிய நாட்டில் நடைபெறும் வாரிசுரிமைப்போர், சோழ மன்னன் இராசாதிராச சோழன் குலசேகர பாண்டியனுக்கு உதவச் சேனைத் தலைவர் பல்லவராயரை அனுப்பல், சோழப் படையும் ஈழச் சேனையும் தொண்டி, பாசிப்பட்டினம் ஆகிய இடங்களில் மோதல், ஞானசிவனாரின் யாகம், அதன் பயனாகச் சோழரின் வெற்றி, அதற்குக் கைமாறாக ஞானசிவனாருக்கு ஆர்ப்பாக்கம் பகுதியை இறையிலியாகக் கொடுத்தல் போன்ற செய்திகள் வரலாற்றுச் சான்றுகளுடன் நிறுவப் பெற்றவை.[11] அவற்றை நாவல் உண்மைக்குச் சிறிதும் மாறுபாடு இல்லாது மிகவும் சுவை

8. ARE. 1924, II 20.
9. Venkata Rao, Cit. K. A. Nilakanda Sastri.

-- The Colas, P, 358.
10. Ibid. P. 360.
11. S. I. I., Vol. 6, 456, 20 of 1899.

யாக விளங்குகிறது[12] இந்த உண்மைகளை 'மகா வம்சம்' என்ற வரலாற்று நூலிலும் காணலாம்.[13]

இத்தகைய வரலாற்றுப் பகுதிகளை நாவல் விளக்கும்போது படிப்பவர்களைக் கவரத்தக்க முறையில் பல வியப்புறு நிகழ்ச்சிகளையும் இனிமையான உரையாடல்களையும் சுவை ததும்ப இடை நுழைத்துள்ளது. ஆகையினால், கலைத்தன்மையில் சிறப்படைந்து விளங்குகிறது. இலங்காபுரி தண்டநாயகன், ஜகத்விஜய தண்டநாயகன் ஆகிய இருவரின் தலைகளும் வெட்டப்பட்டு மதுரைக்கோட்டை வாயிலில் அவமானச் சின்னங்களாக வைக்கப் பெற்றது வரலாற்றுச் செய்தி.[14] இலங்கையிலிருந்து ஒரு வீர மங்கை சபதவுரையுடன் சோழநாட்டுக்கு விரைந்து இளவரசர்களுக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்து முடிவில் சோழ நாட்டில் கொல்லப்படுகிறாள். சாவுக்குப் பின்னர் அவளுடைய உயிரற்றவுடல் மரியாதையுடன் இலங்கைக்கு அனுப்பப்பெற்றது என்பதும் வரலாற்று நிகழ்ச்சியே.[15] இந்த அரிய செய்திகளை நாவலில் மிகச் சிறப்பாக ஆசிரியர் ஊடிணைப்புச் செய்துள்ளார். சந்திரசேனா ஈழத்து வீராங்கனையாகத் தன்னுடைய வீரச் செயல்களை ஈரமின்றிச் செய்துள்ளாள். அவளது அறிவுத்திறன் அனைவரையும் கவரும் தரமானது. அவளுடைய தம்பியாக வந்து துணிவாகச் செயல் புரியும் ஒற்றைச் செங்கண்ணன் ஆசிரியரின் அரிய கற்பனைப் பாத்திரமாக விளங்குகிறான்.

அரசகுரு ஞானசிவனார் செய்த யாகத்தின் தோன்றலான எலுமிச்சங்கனியின் உருள்திசையின் கணிப்பால் சோழரின் படை வெற்றி பெற்றது என்ற இயற்கை இகந்த செய்திக்கு நாவல் பெருமை கொடுத்துச் சிறப்பிக்கிறது.[16] அறிவியலுக்கு ஒத்து வராததை நாவல் ஒப்புக்கொள்வது முறையா என்ற வினா முனைப்பாக எழலாம். கதை நடந்த காலத்தில் வாழ்ந்த மக்களும் மன்னரும் இத்தகைய நிகழ்ச்சிகளை நம்பினர். அதை உணர்த்தும் தரமாக இதனை இடையிணைப்புச் செய்துள்ளதாகக் கருதலாம். வரலாற்று நாவல்கள் அக்காலகட்ட உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் வகைப்படுத்திக் காட்ட வேண்டிய கடமையுடையன என்பதை மறந்துவிடக் கூடாது.

---

12. அந்தப்புரம், பக். 41, 42-
13. மகாவம்சம், அதிகாரம் 76, 77.
14. இரண்டாம் இராசாதிராச சோழனது திருவாலங்காட்டுக் கல்வெட்டு; Ep. Ind. Vol. XXII, No : 14.
15. அந்தப்புரம், பின்னுரை, பக். 559
16. S. I. I. Vol. VI, Ins. No : 456 ; 20 of 1899.

நாவலிலுள்ள முக்கிய பாத்திரங்கள் அனைவருமே தங்களுடைய வரலாற்றுப் பெயர்களுடன் உலா வருகின்றனர். வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றுக்குச் சிறப்பிடம் நாவலில் தரப் பெற்றுள்ளது. வீரராசேந்திரன் என்பது மூன்றாம் குலோத்துங்கனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாக வரலாறு கூறுகிறது. இது இவனுடைய இரண்டாம் ஆட்சியாண்டிலிருந்து (கி. பி. 1180) முப்பத்தாறாம் ஆண்டு முடியவுள்ள கல்வெட்டுக்களில் காணப் படுகின்றது [17] ஆனால், இந்தப் பெயரை முடிசூடுவதற்கு முன்பே நாவலாசிரியர் அவனுக்குச் சூட்டியுள்ளதை வரலாற்று வழுவாகக் கருதலாம். இந்த மன்னனின் இளமைப் பெயரை வரலாறு குறிப்பிடவில்லை என்பதையும் மறந்துவிடக் கூடாது. மேலும், இவனுடைய பல பெயர்களில் 'வீரராசேந்திரன்' என்பதே கவர்ச்சி யாகவும் நாவல் பாத்திரத்திற்கு ஏற்றதாகவும், சோழ மன்னர் பரம்பரைக்கு அடையாளப் பொருத்தம் உடையதாகவும் உள்ளது. இக்காரணங்களால் இந்தப் பெயரைத் தெரிந்தெடுத்த நாவலாசிரியரின் பெயர்சூட்டும் திறனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை

இராசாதிராசனுடைய பட்டத்தரசி, புவனமுழுதுடையாள்[18] என்றும் உலகுடை முக்கோக்கிழானடிகள்[19] என்றும் கல்வெட்டு களில் குறிக்கப்பட்டுள்ளாள். நாவலாசிரியர் இந்த இரு பெயர் களையும் இணைத்து அவளை உலகமுழுதுடையாள் என்று அழைக்கிறார். மேலும், வீரராசேந்திரன் காதலியும் நாவலின் தலைவியுமான புவனமாதேவியை இவளிடமிருந்து தெளிவாகப் பிரித்துக் காட்ட விரும்பியும் இத்தகைய இணைப்புப் பெயர் சூட்டல் உத்தியை ஆசிரியர் கையாண்டிருக்கலாம். இராசாதி ராசனுக்கு வேங்கி நாட்டிலிருந்து 'வானமல்லிகா' என்று ஒரு மனைவியை இரண்டாம் அரசியாக இணைத்திருப்பது நாவலின் தேவை கருதி, சில திருப்பங்களைச் செய்ய எண்ணியே என்று நினைக்க இடமுள்ளது.

சான்றுகளின்றித் தவிக்கும் வரலாற்று ஐயங்களை இந்த நாவல் தீர்த்து வைக்க முயல்வது நமது சிந்தனைக்கு விருந்தாக வும் வரலாற்றுச் சறுக்கல்களைத் தவிர்க்கும் தாங்கலாகவும் உள்ளன. 1178 ஆம் ஆண்டு மூன்றாம் குலோத்துங்கன் சோழ மன்னனாக முடிபுனையப்படுகிறான். அதற்கு முன்பு ஆண்ட

---

17. S. I. I. Vol. VII, No : 88, Ins. 323 of 1911,
18. Ins. 129 of 1197.
19. Ins. 263 of 1913.

இராசாதிராசன் என்ன ஆனான் என்று வரலாற்றில் தெளிவில்லை. அந்த இடத்தில் வரலாற்றுக் கோவை இடையற்றுத் தோன்றுகிறது. ஆனால் இந்த மன்னனின் பின்னாள் கல்வெட்டுக்கள் ஆந்திர நாட்டிலுள்ள திராட்சாராமம் முதலான ஊர்களில் காணக் கிடைக்கின்றன.[20] அவற்றை நோக்கினால் இம்மன்னன் சோழ நாட்டை விட்டு நீங்கிய பின்னர் ஆந்திராவிலுள்ள வேங்கிநாடு சென்று அரசாண்டிருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இக் கருத்தைத் திறமையாகப் பயன்படுத்தி நாவலாசிரியர் தன் கற்பனை ஆற்றலினால் மங்கி மறைந்துள்ள வரலாற்றுப் பகுதிகளுக்கு அறிவு ஒளி பாய்ச்சி மிகப் பொருத்தமாக இராசாதிராசனை வேங்கிக்கு வழி நடத்திச் சென்றுள்ளார். இந்த இடத்தில் வரலாறும் முடங்கவில்லை. கலையும் கெடவில்லை. நாவல் நல்லமுறையில் வளர்ந்துள்ளது.

வரலாறு தரத்தவறிய பகுதிகளை ஆசிரியர் நிகழ்ச்சிக் கோவைக் காகக் கற்பனை செய்துள்ளதை வழுவாகக் கூற முடியாது. கிடைக்கக்கூடிய கல்வெட்டுச்சான்றுகளில் பல சிதைந்தும் மங்கியும் இருப்பதினால் சில உண்மைகளை அனுமான உத்தியால்தான் அறிய வேண்டும் என்பதைப் பல வரலாற்றுப் பேரறிஞர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.[21] கற்பனையில் மிதக்கும் உரிமையுடைய நாவலாசிரியர் தாமே அனுமானித்துச் சில உண்மைகளைக் கற்பனை செய்வதில் எந்தத்தவறும் காணமுடியாது. வரலாற்றுப்போக்குக்கு முரண்படாத வகையில் வாழ்க்கை இயல்புக்கு உடன்பட்டு நிகழ்ச்சித் தொடரில் அற்றுப்போன இடங்களைப் பொருத்தமாக நாவலாசிரியர் தம் படைப்பாற்றலால் பற்றாசு கொடுத்து நிறைவு செய்துள்ளார்.

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழகத்தின் அரசியல் சமுதாயம், சமயம் ஆகியவற்றின் தன்மையினையும், பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றையும் முறைதவறாது நாவலில் பரப்பி, கதை முழுவதும் வரலாற்று மணம் கமழுமாறு செய்துள்ளார். ஆடையணிகள், போர்க்காட்சிகள், வணக்க இயல்புகள் விழாக் கோலங்கள், பயிர்முறைகள், கலையமைப்புகள் ஆகியவற்றிலும் ஆசிரியர் காலவுணர்வைக் காட்டி, வரலாற்றை வாழச் செய்துள்ளார்.

---

20. சதாசிவப் பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, பக். 138.

(21) K. A, Nilakanta Sastri, The Colas, p. 358.

நாவலைப் படிக்கும்போது நம்மை அறியாமல் நாம் கதை நடக்கும் வரலாற்றுக் காலத்துக்குச் சென்றுவிடவேண்டும். அவ்வாறு நம்முடைய உணர்வைக் கவர்ந்து வரலாற்று நாயகர்களுடன் ஒன்றாக இருந்து உறவாடச்செய்யும் உத்தியை நாவலாசிரியர் கையாண்டுள்ளார் பழையாறைக்கு அழைத்துச்செல்கிறார். காளி கோவில் காட்சியைக் காணக்கூப்பிடுகிறார். காமரதிவல்லியிலுள்ள கலைக்காட்சிகளைக் காட்டுகிறார். நாம் நம்மை இழக்கிறோம். வரலாற்றோடு ஒன்றி விடுகிறோம். ஆசிரியர் தாமரைமணாளன் வெற்றிக் களிப்பில் சிரிக்கிறார். நாவலில் வரலாறு வாழ்கிறது எனபதற்கு இதுவே சான்று.

## உலகியல் போக்கு :

எந்த நாவலும் தான் எழுந்த காலத்தின் உலகியல் போக்குக்கு முரண்படாத வகையில் அமையவேண்டும். உலக வாழ்வு இன்பமும் துன்பமும் கலந்தது. ஆகையினால் மனிதனின் இன்ப துன்ப உணர்வுகளுடன் இணைந்து படிப்பவர்களைக் கவரும் தன்மையுடன் நல்ல நாவல் எழுச்சியுடன் மலரவேண்டும். மனிதனின் மனம் நல்லதையும் கெட்டதையும் ஊற்றெழச் செய்யும் வற்றாத கேணியாக உள்ளது. ஒருவரைப் போல் இன்னொருவர் சிந்திப்பதும் செயல்படுவதும் அரிதிலும் அரிது. ஒவ்வொரு மனிதனுக்கும் சிலவிதமான தனித்தன்மைகள் உண்டு. மனிதனின் புறத்தோற்றம் போன்று அகவுணர்வு அமைவதில்லை. போலித் தன்மை மிகுதியாகக் காணப்படுகிறது. சொல்லும் செயலும் முரண்பட்டுப் பிறருக்கு ஏமாற்றத்தையும் துன்பத்தையும் கொடுக்கும். மேலும் சோதனைகள் நிறைந்த உலகில் மனிதன் பலவித சாதனைகள் புரிய முயல்வது வழக்கம். அதற்கு எதிர்ப்பு ஏற்படலாம். அதன் பயனாக மோதலும் சாதலும் நிகழலாம். மனித வாழ்வில் தினம் தினம் காணும் நிகழ்ச்சிகளைக் கூர்மதியால் கண்டு நிறைமதியால் அளந்து கலையுணர்வால் உருக்கொடுத்து இலக்கியப் படைப்புகளாக வெளியிடுவதே சிறந்த ஆசிரியரின் சாதனை ஆகும்,

வாலாற்று உண்மைகளை மாத்திரம் கொண்டு ஒரு நாவலை உருவாக்க முயன்றால் கருத்துத் தேக்கம் ஏற்பட்டு நாவல் முடமாகி விடக்கூடும். ஆகையினால், சிந்தனை முகிழ்ப்புடைய நாவல் ஆசிரியர் தான் திரட்டியுள்ள வரலாற்றுக் கருத்துக்களுடன் தன் அறிவுக் கருவூலத்திலிருந்து அருமையான கற்பனைக் கருத்துக்களை எடுத்து அவற்றுடன் வாழ்வுக்கு முரண்படாத முறையில் இணைத்துத் தன் படைப்பை உருவாக்க வேண்டும். கலைக்காகவும் சுவைக்காகவும் இணைக்கப்படுபவை அளவுக்கு அதிகமாக மிஞ்சி

விடக் கூடாது. அறிவுக்காகச் சேர்க்கப்படுபவை அளவுடன் இருப்பதே சிறப்பு. உலகியல் போக்கு நாவலில் உயிரோட்டமாக விளங்க வேண்டும்.

'அந்தப்புரம்' நாவலில் வரலாற்று உண்மைகளுடன் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களும் படித்துச் சுவைக்க வேண்டிய பகுதிகளும் உணர்ந்து இன்புறத் தக்க செய்திகளும் படிப்போர் தங்களைத் தாங்களே அடையாளங் கண்டு உண்மையை உணர வேண்டிய இடங்களும் அறிய வேண்டிய அறிவுரைகளும் திருந்திய வாழ்வை உணர்த்தும் செம்மையுரைகளும மணிமிடை பவளமாகக் கோவையாக அமைந்து உள்ளன. உண்மைகளை உலகுக்கு உணர்த்திக் காட்டுவதற்காகப் பாத்திரங்களை மோத விட்டும், வாதிடத் தூண்டியும், முரண்பட்டுப் பிரிந்தும், சூதினைச் செய்ய வைத்தும். கதையை ஆசிரியர் வளர்க்கிறார் உண்மையைப் புலப்படுத்தல், கள்ளத்தைக் கண்டித்தல், மறைவைத் திறத்தல், மயக்கங் களைதல், வீரமூட்டல், விவேகங் கொடுத்தல், மானவுணர்வு ஊட்டல், காதலை ஊக்குவித்தல் முதலிய நற்பணிகளை நயமாகச் செய்கிறார். நாட்டுப் பற்று ஊட்டப்படுகிறது. தேவையான உணர்ச்சிகளைப் பெருக்கவும் தேவையற்றவற்றைக் களையவும் நாவல் வழிமுறை வகுத்துக் கொடுக்கிறது.

அரிய கருத்துக்களை உரிய இடங்களில் வரலாற்றுக் காலத்துக்கு மாத்திரமன்றி எக்காலத்துக்கும் பொருந்தும் தரமாக நாவலுக்குள் பரவலாகத்தூவி ஆசிரியர் தம் கடமையைச் செய்துள்ளார். மனிதனின் இயற்கையான உணர்வுகளும் இயல்பான போக்குகளும் எக்காலத்துக்கும் பொருந்துவன என்பதை நன்றாக உணர்ந்து கருத்துக்களை வரலாற்று மாந்தர்களின் வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சுவைகளை நாவலுக்குள் பரவச் செய்துள்ளதால் படிப்பதற்குச் சுவையாக அமைந்துள்ளது. இன்பம், வீரம், வியப்பு, ஆகிய சுவைகள் மிகுதியாக வந்துள்ளன. வரலாற்று நாவல் வெற்றியடைய இத்தகைய சுவைகள் தேவை. சில இடங்களில் இன்பச் சுவை அளவுக்கு மீறிப் பாலுணர்வைத் தூண்டும் போக்கில் கலவை செய்துள்ளதைக் குறிப்பிட்டுக் கூறாமல் இருக்க முடியவில்லை. ஆசிரியர் இதற்குத் தம்முடைய முன்னுரையில் அமைதி கூற முயல்கிறார். அவர் எவ்வளவுதான் கூறினாலும் தாம் இந்தச் சமுதாயத்தின் நல்வாழ்வுக் காவலர் என்பதை ஒரு கணமும் மறந்துவிடக்கூடாது. அளவுக்கு மிஞ்சி எதையுமே இளையோர்க்குக் கொடுக்கக் கூடாது. அவர்கள் உணர்ச்சிச் சூறாவளிகள். அதைக்

கட்டுப்படுத்தி இளம் உள்ளங்களை நெறிப்படுத்த வேண்டிய கடமை தாமரைமணாளன் போன்ற முன்னணி நாவல் ஆசிரியர்களுக்கு உறுதியாக உண்டு. மேலும் ஒரே விதமான இன்பச்சுவை விளக்கங்கள் பல இடங்களில் வருவது அலுப்பைத் தருவதாகவும் உள்ளது. வார இதழுக்குச் சரியான சில உத்திகள் நூலுருவில் வரும் நாவல்களுக்குப் பொருந்தாது என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டாக உள்ளது.

நாவலில் நகைச்சுவையைப் பல வழிகளில் படிப்போருக்குத்தர ஆசிரியர் முயன்றுள்ளார். ஆனால் சிந்தனைக்கு ஊட்டம் தரும் அவலச் சுவையை அளவோடு தந்திருப்பது ஒரு குறையாகவே படுகிறது. இடையிடையே சிரிக்க வைத்தது நல்ல வெற்றியாக அமைகிறது. அதேபோன்று சில இடங்களில் கண்ணைப் பனிக்கச் செய்திருந்தால் இந்த வெற்றி இரு மடங்காகி இருக்கும். இரக்க உணர்வுக்கு இரை அதிகம் தரப்பட்டதாகத் தோன்றவில்லை. இறுதியில் ஞானசிவனாரின் மகன் இளவரசனின் உயிரைக் காக்கத் தன் உயிரைக் கொடுத்தது வட்டியும் முதலுமாக அவலத்தை அள்ளிக் கொட்டுகிறது.

மதியின் குறை போன்று இருக்கும் சிலவற்றை ஒதுக்கிக் காண்பதாயின் 'அந்தப்புரம்' உலகியல் கருத்துக்களை உண்மையாக விளக்கி மக்கள் வாழ்வுக்குப் பயன்படும் இலக்கியமாகச் சிறந்துள்ளது என்பதற்கு ஐயமே இல்லை.

## உளவியல் கருத்துக்கள்

மனித மனத்தை மாறுபாடுகளின் களஞ்சியமாகவும் மதிக்கலாம். அதே சமயம் எண்ணங்களின் ஊற்றுக் கண் என்றும் மகிழலாம். மன சாந்தியும் அங்குத்தான் ஊறுகிறது. பெருஞ்சதியும் அங்குத்தான் உருவாகிறது. ஆறுதலைத் தரும் மனத்தில் அமைதியைக் குலைக்கும் கருவும் அடங்கிக் கிடக்கின்றது. இவ்வாறு பல்வகைக் கோணப் போக்குடைய மனித உள்ளத்தின் இயல்பை நாவல் ஆசிரியர்கள் நன்றாக உணர்ந்திருக்க வேண்டும்.

ஆண்களும் பெண்களும் உருவிலும் உணர்விலும் வேறுபடும் இடங்களை 'அந்தப்புரம்' அழகாக எடுத்துக் கூறுகிறது. உண்மையான உள்ளப் பிணைப்புடைய வீரராசேந்திரனையும் புவனமாதேவியையும் பிணங்கிய நிலையில் ஆசிரியர் அறிமுகப் படுத்துவது ஒரு சிறப்பாகவே படுகிறது. சிறிது நேரத்தில் கோபமாகப் பேசிய புவனமாதேவி வீரராசேந்திரனின் அணைப்புள்

அடங்கி இன்ப உணர்வு காட்டுகிறாள். இதுதான் காதலுற்ற பெண் களின் இயல்பு. 'புவனமாதேவியின் செவ்விதழ்களில் எப்படி இந்த மனோகரச் சுந்தரப் புன்னகை புகுந்தது' (பக். 11) என்ற வியப்பை ஆசிரியர் எழுப்பிப் படிப்போரின் சிந்தனைக்குச் சுவையான உணவு ஊட்டுவது உள நூல் இரகசியம் என்பதை மறந்து விடக் கூடாது.

மாதங்கியின் உடல் ஓவியத்திலிருந்த வீரராசேந்திரனின் உருவைக் கண்டதும் உணர்ச்சிப் பெருக்கில் தள்ளாடித் தவித்தது அவளது மன நிலையை உடைத்துக் காட்டும் உத்தியாக உள்ளது. (பக். 15) சந்திரசேனாவின் பாத்திரப் படைப்பு மிகவும் சிக்கலான தாகவும் சிறப்பு உடையதாகவும் அமைந்துளளது. வஞ்சந் தீர்க்க ஈழத்திலிருந்து வந்தவள் வீரராசேந்திரனைக் கண்டதும காதல் வயப்பட்டுக கடமைக்கும் காதலுக்கும் இடையில் சிக்கித் தவிப்பது மிக அருமையான உணர்ச்சி மோதலாக அமைந்துவிடுகிறது.

புவனமாதேவியும் மாதங்கியும் வீரராசேந்திரனை உண்மை யாகக் காதலிக்கின்றனர். ஆனால், இருவருடைய காதலுக்கும் நிரப்ப வேறுபாடு இருப்பதை மிகமிக நுட்பமாக ஆசிரியர் காட்டுவது அவரது நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்துவ தாகும். சந்திரசேனாவின் காதல் ததும்பும் மனத்தின் இயல்பையும் பிரித்துக் காட்டி அனைவரையும் வியப்படையச் செய்கிறார்.

'அவருடைய அன்பு ஒன்றே பெரிது' (பக். 64) என்று கூறுகிறாள் மாதங்கி.

வீரராசேந்திரன் தன் தகுதிக்குப் பொருந்தாத நிலையில் சேனைத்தலைவன் பதவியை ஏற்றுக் கொண்டதும் காதலியான புவனமாதேவி அவனைப் பார்த்து,

'இளைஞரே! என் கரங்களைத் தொட வேண்டாம். ஒரு சுத்த வீரனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை என் கரங்கள்' (பக். 224) என்று கூறுகிறாள். இன்னொரு சூழ்நிலையில் சந்திரசேனா சிறிதும் அசைவில்லாத துணிவுடன்,

'என் இதயம் ஒரு கோழையைக் காதலிக்காது' (பக். 72) என்று கூறுகிறாள். ஒரே உணர்வுடைய மூன்று பெண்களின் மன வேறுபாட்டை எவ்வளவு நுட்பமாக வேறுபடுத்துகிறார் என்பதை இக்கூற்றுக்களிலிருந்து உணரலாம்.

காதலுணர்வில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை காட்டவும் ஆசிரியர் தவறவில்லை. 'ஓர் ஆணுக்குக் காதல் என்பது

பொழுதுபோக்கு. ஆனால் ஒரு பெண்ணுக்கோ காதல்தான் ஜீவ ஊற்று'. (பக். 279) இது இராசாதிராசனுடைய கருத்தாக வெளி வருவதினால் ஆசிரியர் வேறுபடவும் இடம் உண்டு. 'பெண்மையை வெல்லுவதைவிடப் பெண்மையிடம் தோற்பதுதான் பாரம்பரியமான ஆணின் வெற்றி (பக்.483) என்று ஆசிரியர் கூறுவதும் சிந்தனைக்கு உரியது. 'ஆலயத்தை ஆண்டவனுக்குத் தகுதியாக நிருமாணிக்க வேண்டும்' என்ற புவனமாதேவியின் உரையும் 'ஆலயத்தைப் பற்றிக் கவலையில்லை. ஆண்டவன் போதும்' என்ற மாதங்கியின் கூற்றும் இருவருடைய காதல் கொள்கையிலுள்ள வேறுபாட்டை நுண்மைத் திறனுடன் விளக்கும் இடமாக உள்ளது. (பக்.83) உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களையும் கொள்கை இயல்புகளை யும் உருவகத் தோற்றங்களாக விளக்கும் ஆசிரியரின் திறமையைப் புலப்படுத்தும் ஒரு சிறந்த இடமாக இது உள்ளது. 'காதல் மட்டுமே என் தர்மம்' (பக். 321) என்ற கொள்கை வெறியுடைய மாதங்கியை நோக்கி அவளுடைய காதல் தெய்வமான வீரராசேந்திரன் 'எனக்காக எந்தத் தியாகத்தையும் உறுதியாகச் செய்ய வல்லவள் நீ ஒருத்திதான்' என்று கூறுவது (பக். 448) அவளைப் புவனமாதேவிக்கு மேல் ஒரு படி உயர்த்திவிடுகிறது. நாவல் முழுவதும் மிகக் கருத்தாகப் படித்துச் சிறந்த உண்மைகளை உளநூல் அடிப்படையில் கண்டு உணரத்தக்க முறையில் 'அந்தப்புரம்' சிறப்பாகப் படைக்கப்பெற்றுள்ளது.

பெண்களைப் பல கோணங்களில் அலசி ஆராய்வதற்கு இந்த நாவலை ஆசிரியர் தாமரைமணாளன் பயன்படுத்தியுள்ளார். பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் நாவலாக இதைக் கருதலாம். வானளாவப் பெண்ணின் உயர்வைக் காணும் நாவலில் அவளின் பொறாமைப் பண்பும் விரிவாக விளக்கப்படுகிறது. அதோடு அமையாமல் 'பெண்ணின் கள்ளப் பார்வையில் காலனைப் பார்க்கும்' காட்சியும் வருகிறது. (பக். 29) 'உலக ஞானம் என்றால் பெண்களைப் பற்றிய ஞானம்தான்' (பக். 87) என்ற அளவுக்கு ஆசிரியர் பெண்களைப் புரியாத புதிர்களாகக் கருதுகிறார். முடிந்த முடிவாக "முரண்பாடே உன் பெயர்தான் பெண்மையா" என்று இரண்டு இடங்களில் (பக். 324, 445) வேகமாகக் கேட்பது ஆசிரியரின் முரண்பட்ட கருத்தை வெளிப்படுத்துவதாகும்.

பெண்களைப்பற்றி அலசுவது போன்று ஆண்களைப்பற்றியும் பல கோண ஆய்வு நடத்த ஆசிரியர் தவறவில்லை. வீரம், சூழ்ச்சி, பதவி மோகம், மானவுணர்வு, காதல், காமம், தியாகம் போன்ற பல நிலைகளில் ஆண்களின் உள்ளத்தின் இயல்பு அலசப்படுகிறது. உளநூல் உண்மைகளுக்கு முரண்படாது உளப் பண்புகள் உணர்த்தப்படுவது இந்த நாவலின் சிறப்புகளில் ஒன்றாகும்.

## படைப்பு உத்திகள்

படிப்போரின் ஆவலைத் தூண்டுவதற்கு ஆசிரியர் கையாளும் உத்திகளே நாவலின் கட்டுக்கோப்புத் திறன்களாக அமைகின்றன. நாவலை விழாக் காணும் ஆவலில் தொடங்கி இடையிடையே முன் நிகழ்ச்சிகளை விளக்கியும் முக்கிய பாத்திரங்களை அறிமுகப் படுத்தியும் வளர்த்துச் செல்கிறார். அத்தியாயத் தலைப்புகளே ஆவலைப் பெருக்குவனவாகத் தோன்றுகின்றன. முதல் அத்தியாயத்தை 'விழிப்போர்' என்று அழைத்துப் பல்வேறு சிந்தனைகளுக்கு இடம் வகுத்து விடுகிறார். கதையில் 'விழிப் போர்' நடப்பதை விளக்குவதுடன் நம்மையும 'விழிப்போராக்கி' விடுகிறார்.

கதையை வளர்க்க ஆசிரியர் கையாளும் உத்திகளைக் கணக்கிட்டு விளக்குவதாயின் அதுவே ஒரு நூலாக விரியும். ஆசிரியர் கூற்று. பாத்திர உரையாடல், பாத்திர உள்ளுணர்வைக் காட்டல், குதிரையுடன் கற்பனை உரையாடல், ஓவியத்தைக் கண்டதும் எழும் எண்ணம், முன்னிகழ்வு நினைத்தல், பின்னிகழ்வு உணர்தல் போன்ற பல வழிகளைப் பின்பற்றிக் கதை நிகழ்ச்சிகள் மறைக் காட்சிகளாகவும், குறைத் தோற்றங்களாகவும், வியப்புறு நிகழ்ச்சிகளாகவும், பல்வேறு திருப்பங்களாகவும் வளர்ந்து நிறை வுறுகின்றன. முரண் காட்சிகளும் உள்ளன. வாழ்வில் இணைய வேண்டிய வீரராசேந்திரனும் புவனமாதேவியும் பிணங்கிச் சிணுங்குவது நடப்பு முரணாகவுள்ளது.

இந்த நாவலின் கட்டுக்கோப்பு உத்திகளில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது அதிலுள்ள 'மறைப்பு உத்தியாகும்' (Suspense). இராசாதிராசனின் மன எண்ணத்தை இறுதிவரை மறைத்தல், வீரராசேந்திரனின் அண்ணனான மூத்த இளவரசனைக் காளிமா கண்டராகக் காட்டல், ஞானசிவனாரின் அரிய தியாகத்தை மறைத்தல் போன்றவை பெருவியப்பின் களமாகவே அமைகின்றன. ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கி அல்லது அறிவித்துப் படிப்போரின் ஆவலைத் தூண்டி இரக்கவுணர்வைப்பெற்ற பின்னர் எதிர்நோக்கும் ஆபத்தை முறையாக அகற்றி வியப்பைக் கூட்டிக் கதையை வளர்க்கும் முறை மிகச் சிறப்பாகக் காணப்படுகிறது.

ஒரு நாவலை முதல்முறை படிப்பதற்கும் பின்னர் படிப்பதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. முதலில் ஆசிரியரின் அடக்கப் பொருள்கள் ஆவலைப் பெருக்கி நாவலைப் படிக்கத் தூண்டுவதைக் காணலாம். அடுத்த முறை படிக்கும்போது பின்னர் நடக்கப்போவது நம் மனத்திரையில் முன்பே பதிவாகியிருப்பதினால் உணர்ச்சி மாறுவது

இயல்பாகும். அந்த நிலையிலும் நாவலைப் படிக்கும் ஆவல் பெருகுமாயின் அதுவே சிறப்பாகவும பெருமையாகவும் கருதத் தக்கது. உண்மையான இலக்கிய நயமுடைய நாவல்களை எத்தனை முறை வேண்டுமானாலும் படிக்கலாம். படிக்கப் படிக்க நம் மனதில் எழும் சிந்தனை முகிழ்ப்புக்கு நாவல் ஊட்டம் கொடுத்து உணர்வு பெருக்க வேண்டும். அதுவே உண்மையான இலக்கியச் செல்வமாக விளங்கும். 'அந்தப்புரம்' ஆய்வுக்கு நல்ல விருந்து படைக்கிறது. ஓரிடத்தில் ஆசிரியர் பிறப்பின் உடன்பிறப்பு மரணம், (பக். 421) என்று கூறுகிறார். ஒரு தாயின் பிள்ளைகளைத் தான் உடன்பிறப்பு என்று கூறுவர். பிறபபுக்கும் இறப்புக்கும் ஒரு தாயா என்ற வினா எழுகிறது. சிந்தனை சிறகு கட்டி பறக்கிறது. முடிவு தோன்றுகிறது. காலமாகிய தாயின் பிள்ளைகளான பிறப்பும் மரணமும் உடன்பிறப்புகளே என்பது தெளிவாகிறது. இவ்வாறு வாழ்வுக்கு உதவும் நல்ல பல கருத்துகளை நாவல் தருகிறது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் அந்தப்புரத்துக்கு ஓர் உயர்ந்த இடம் உள்ளது என்பது உண்மை.

## மொழிநடை

அந்தப்புரம் எளிமையான இனிய தமிழில் சாதாரண மக்களும் படித்து மகிழும் தரமாக எழுதப்பெற்றுள்ளது. ஓர் இலக்கியப் படைப்புக்கு உரிய 'மொழிச்செம்மை' இந்த நாவலில் இருப்பதாகக் கூறலாம்.

'அந்த யானை (ஞானசிவனார்) அடி சறுக்கி நின்ற சூழலை இரண்டு புள்ளிமான்களும் (புவனமாதேவியும் மாதங்கியும்) மிகவும் சூட்டிப்பாகப் பயன்படுத்திக் கொண்டன. (பக். 60). உருவக அமைப்பில் பொருளை நிரப்பி அனைவருக்கும் புரியும்படியாக இனிய முறையில் அமையும் நடைக்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

நல்ல சொல்லாக்கங்களை இந்த நாவலின் மூலம் ஆசிரியர் தமிழுக்குப் படைத்துத் தந்துள்ளார். அறத்துன்பம் (தர்மசங்கடம், பக். 134), மரியாதைக்கு உரிய தொலைவு (Respectable distance, பக். 149) அகநானூற்றுச்சுவை (இன்பச்சுவை, பக். 118), பாசப் புனல் (பக். 150) போன்றவை அவற்றுள் சில. மேலும் கொய்சகம் (கொச்சம், பக். 2), சகடைவண்டி (சக்கடா வண்டி, பக். 3) தண்டிறங்கல் (பக். 312), கடகங்கள் (பக். 312) போன்ற பழஞ் சொற்களை உரு மழுங்காது பயன்படுத்தியுள்ளார். இதோடு அமையாமல் தேவலாம் (பக். 290), புளுகர் (பக். 444), வதந்தி

(பக். 4) போன்ற சொற்களை வரலாற்றுக் காலத்துக்குப் பொருந்தாது பயன்படுத்தியுள்ளமை பகை நரம்பொலி போன்று நாவலுக்குள் மாறுபட்டு ஓசை எழுப்புகின்றது. இவற்றைத் தவிர்த்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

அருமையான உவமைகளும் உருவகங்களும் பல இடங்களில் பொருள் நிறைந்த கருவூலங்களாகத் தோன்றி நாவலின் இலக்கியத் தரத்தைக் கூட்டுகின்றன. காலத்துக்கும் கருத்துக்கும் ஏற்ற நல்ல நடையாக இதை ஒப்புக் கொள்ளலாம்.

## இலக்கிய வீதியில் 'அந்தப்புரம்'

இலக்கிய வீதியில் இனிது நடக்கும் ஓர் இலக்கியச் செல்வமாக 'அந்தப்புரம்' விளங்கிச் சிறந்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். இது வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுவைபட மாற்றிக் கற்பனைக் கலவையுடன் தருவதினால் 'வரலாற்றுப் புனைவு' என்று அழைக்கப் படும் தகுதியைப் பெறுகிறது. மிகப்பெரும் உழைப்பால் அரும்பெரும் வரலாற்று உண்மைகளைத் திரட்டி, சிறந்த உலகியல் கருத்துக் களை முறைதவறாது இணைத்துக் கற்பனைத் திறனால் கலைச் சுவையைப் பெருக்கிப் பாமரரும் படிக்கும் தரமாக அரிய ஆய்வுப் பொருட்களை உள்ளடக்கி 'அந்தப்புரம்' என்ற நாவலை ஆசிரியர் தாமரைமணாளன் தமிழன்னைக்குத் தந்துள்ளார்; அவரைப் போற்றிப் புகழத் தமிழ் உலகம் இனித் தயங்காது. தாமரை மணாளனின் பெயர் தமிழ் நாவல் உலகில் என்றும் நிலைத்து வாழ் வது உறுதி.

---


**கட்டுரையாளர்க்கு ....**

தாங்கள் தமிழ்ப்பொழிலுக்கு அனுப்பும் ஆய்வுக்கட்டுரையை முழுநீளத் (Fool scap) தாளில், அடிக்குறிப்புக்கள் அவ்வப் பக்கத்தின் கீழ் அமையுமாறு தட்டச்சுச் செய்து இரண்டு படிகள் அனுப்பியுதவுக.

## தமிழ்-ஆங்கில வினா வகைகள் ஓர் ஒப்பீடு

(சென்ற இதழின் தொடர்ச்சி)

வி. ரேணுகாதேவி,

3. வினாவை உணர்த்தும் வினாப் பெயர்ச் சொற்கள் பெரும்பாலும் முதல் நிலையிலேயே வரப் பெறும்.[3]

Where is the book ?

4. வினாப்பெயர்ச் சொற்கள் மட்டுமே தனித்து நின்று வினா (குறை) வாக்கியங்களாகச் செயல்படுவதுண்டு.

What ?

Where ?

how ?

5. ஆங்கிலத்தில் வினாவை உணர்த்தும் துணைவினைகளும் வினாப்பெயர்ச்சொற்களும் பால் உருபுகளை ஏற்காது எண், இடம், இவற்றுடன் இயைபு கொண்டு வரும்.

Where is he going ?

Where is she going ? Where is it going ?

Where are they going ?

6. வினாப் பெயர்ச்சொற்களில் "Who" என்பது உயர் திணைக்கும், "which", "how much" என்பன அஃறிணைக்கும் ஏனையவை விரவுத்திணைக்கும் வருதலைக் காணலாம்.

Who is coming ?

How much is this ?

What is he doing ?

What is it doing ?

7. வினாவை உணர்த்தும் வினாச்சொற்களில் "how many" 'how much" என்னும் வினாச்சொற்கள் கூட்டுச் சொற்களாக அமைய ஏனைய வினாச்சொற்கள் அனைத்தும் தனிச் சொற்களாக அமைந்துள்ளன.

### 1.2.2. வினா வகைகள் :

ஆங்கிலத்தில், வினாக்களை அவற்றின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு பகுப்புவடிவவினாக்கள் எனவும் மேல்

பகுப்புவடிவவினாக்கள் எனவும் இரு வகையாகப் பாகுபாடு செய்யலாம்.

பகுப்பு வடிவ வினாக்களில் வினா பகுப்புக் கூறுகளாலும் மேல் பகுப்புவடிவவினாக்களில் வினா மேல் பகுப்புக் கூறுகளாலும் உணர்த்தப் படுகின்றது.

## 1.2.2.1 பகுப்பு வடிவ வினாக்கள்

ஆங்கிலத்தில் பகுப்பு வடிவ வினாக்களை அவற்றின் சொல் வகைத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு துணைவினை வகை வினாக்கள் எனவும், பெயர்ச்சொல் வகை வினாச்கள் எனவும் இரண்டாக வகைப்படுத்துதல் இயலும்.

Are you coming ?
May I come in ? — துணைவினை வகை வினா
What is the time ?
Where are you going — பெயர்ச்சொல் வகை வினா

### 1.2.2.1.1. துணைவினை வகை வினாக்கள்

துணைவினை வகை வினா வாக்கியங்களில் வினா துணை வினைகளால் உயர்த்தப்படுகின்றது.

Are they cutting the cloth ?
Has he come ?

சாதாரண வாக்கியத்தில் அமைந்துள்ள துணைவினையை வாக்கியத்தின் முதலில் கொண்டு வருவதன் வாயிலாகத் துணை வினை வகை வினாக்கள் உருவாக்கப் பெறுகின்றன.

He came did + he + come — Did he come ?
are you right — Are you right ?

துணைவினைவகை வாக்கியங்களில் துணைவினைகள் எப் பொழுதும் வாக்கியத்தின் முதலில் அமையப் பெறும்.

வினாவை உணர்த்தும் துணைவினைகள் எழுவாயின் எண், இடத்தோடு இயைபு கொண்டு அமையும்.

Am I going ? — ஒருமை
Are we going? — பன்மை
Am I working ? — தன்மை
Are you working? — முன்னிலை
Is he working ? — படர்க்கை

துணைவினைவகை வினாக்களுக்கு "ஆமாம்" அல்லது "இல்லை" என்பதே விடையாக அமைந்து வரும்.

Did you complain against me ?

"Yes"

Do you feel relived now ?

"No"

இன்னமும் இத்தகைய வினாக்களுக்கு "Certainly", "perhaps" "hardly", "not at all" என்னும் (குறை) வாக்கியங்களும் விடையாக அமையப் பெறுகின்றன.

Do you feel hungry ?

"of course"

Are you coming with me ?

"Certainly" or "not at all"

ஆங்கிலத்திலும் தமிழில் காணப்படுவது போன்று தொடர் வகை வினாக்கள் (ஒ. பா. 1. 1. 2. 1. 1.) காணப்படுகின்றன. இத்தொடர் வகை வினாக்களில் வினா துணைவினைகளால்தான் உணர்த்தப் படுகின்றது.

You are not ill, are you ?

John is married, isn't he ?

இத்தொடர் வகை வினாக்களுக்கும் "ஆமாம்" அல்லது "இல்லை" என்பதே விடையாக அமைவதால் இவை துணைவினை வினாக்களின் பாற்படும்.

### 1.2.2.1.2. பெயர்ச்சொல்வகை வினாக்கள்

பெயர்ச்சொல்வகை வினாக்களில், பெயர் சொற்களே வினாவை உணர்த்தப் பயன்படுகின்றன.

ஆங்கிலத்தில் "who", "what", "which", "where", "why", "when", "whom", "whose", "how many", "howmuch", "how", போன்ற வடிவங்கள் பெயர்ச்சொல்வகை வினாச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இப்பெயர்ச்சொல்வகை வினாச்சொற்களில் "how", how many", "how much" என்னும் சொற்களைத் தவிர ஏனைய வினாச் சொற்கள் 'wh-" என்னும் வினாவடியிலிருந்து தோற்றம் பெற்றுள் ளன.

பெயர்ச்சொல்வகை வினாக்கள் பால், உருபுகளை ஏற்று வருவதில்லை. (ஒ பா. 1. 2. 1.5)

வினாப்பெயர்சொற்களில் "who" என்பது உயர்திணைக்கும், "which",, "how much" என்பன அஃறிணைக்கும் ஏனையவை இரு திணைக்கும் வருதலைக் காணலாம். (ஒ பா. 1.2.1.4.)

பெயர்ச்சொல்வகை வினாக்களுக்கு விடை ஒரு செய்தியாக அமையப்பெறும்.

When are you leaving ?

"Tomorrow night"

Whose pen is this ?

"It is mine"

ஆங்கிலத்தில் பெயர்ச்சொல்வகை வினாக்களில் வினாவை உணர்த்தும் சொற்கள் வாக்கியத்தின் முதலில் வரும். சில இடங்களில் தனித்துக் குறை வாக்கியங்களாக வருகின்றன.(ஒ.ப.1.2.1.4.)

பெயர்ச்சொல்வகை வினாக்களில் வினாவை உணர்த்தும் சொற்களை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனி வடிவச் சொற்கள் எனவும் கூட்டு வடிவ வினாச்சொற்கள் எனவும் வகைப் படுத்த இயலும்.

"who", "what", "which", "where", "why", when", whom, "whose", "how" என்பன தனிவடிவ பெயர்ச்சொல்வகைச் சொற்களாகும். "How many", How much" என்பன கூட்டுவடிவப் பெயர்ச் சொல்வகை வினாக்களாகும். இவை "how" என்றும் வினாவடியுடன் "many", "much" என்னும் சொற்கள் இணைவதால் ஆக்கம் பெறுகின்றன.

## 1.2.2.2. மேல் பகுப்பு வடிவ வினாக்கள்

ஒரு வாக்கியத்தின் இறுதிச் சொல்லின் மேல்பகுப்புக் கூறாகிய சுரவிசையை உயர்த்துவதால் வினா உணர்த்தப் பெறுமாயின் அதனை மேல் பகுப்பு வினா வாக்கியம் எனலாம்.

The king gave him a medal ? ↑

Those are new books ? ↑

மேற்பகுப்பு வினாக்களுக்கு "ஆமாம்" அல்லது "இல்லை" என்பதே விடையாக அமையும்.

You bought this book ? ↑
"Yes"
That is bamboo ? ↑
" No "

## 1.3. தமிழ் – ஆங்கில - வினாக்கள் ஒப்பீடு :

தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒரு விடையினைப் பெறும் பொருட்டுக் கேட்கப்படும் வாக்கியம் வினா வாக்கியம் எனப்படும். இவ்வாக்கியத்தில் வினாவினைச் சுட்டும் ஒரு இலக்கணக் கூறு அமைந்துள்ளது.

தமிழில் வினாவாக்கியத்தில் வினாவைக் குறிக்க ஒரு இடைச் சொல்லோ,ஒரு வினாச்சொல்லோ அல்லது ஒருமேற்பகுப்புக்கூறோ இருக்கிறது ; ஆங்கிலத்தில் ஒரு துணைவினையோ ஒரு வினாப் பெயர்ச்சொல்லோ, அல்லது ஒரு மேற்பகுப்புக் கூறோ அமைந்துள்ளது.

தமிழிலும்,ஆங்கிலத்திலும்,வினாக்கள் பகுப்பு வடிவ வினாக்கள் என்றும், மேல் பகுப்பு வடிவ வினாக்கள் என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

தமிழில் பகுப்பு வடிவ வினாக்கள், வினா இடைச்சொல் வகை வினாக்கள் என்றும், வினாச்சொல்வகை வினாக்கள் என்றும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தில் பகுப்பு வடிவ வினாக்கள் துணைவினை வகை வினாக்கள் என்றும், பெயர்ச்சொல் வகை வினாக்கள் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழில் வினாஇடைச்சொல் வகை வினாக்கள், சதாரண வாக்கியத்தின் பயனிலை சொல்லின் இறுதியில் "ஆ", "ஓ", "ஏ" என்னும் இடைச்சொற்களைச் சேர்ப்பதன் வாயிலாக ஆக்கம் பெறுகின்றன. இவ்வினாக்களுக்கு "ஆமாம்" அல்லது "இல்லை" என்பதே விடையாக அமைந்துள்ளது. இவை தவிர 'நிச்சயமாக" "உறுதியாக" என்னும் குறை வாக்கியங்களும் விடையாக அமைந் துள்ளன.

ஆங்கிலத்தில் துணைவினைவகை வினாக்கள், சாதாரண வாக்கியத்தில் உள்ள துணை வினையை அவ்வாக்கியத்தின் முதலில் கொண்டு வருவதால் ஆக்கம் பெறுகின்றன. வினாவை உணர்த்தும் துணை வினைகள் வாக்கியத்தின் முதலில் மட்டும் வரும் இவ்வினாக்

களுக்குப் பெரும்பான்மையும் "ஆமாம்" அல்லது "இல்லை" எனபதே விடையர்க அமைந்துள்ளது. இவை தவிர 'Certainly", "Perhaps", Not at all", என்னும் குறை வாக்கியங்களும் விடையாக அமைந்துள்ளன.

தமிழில், தொடர் வகை வினா, இடைச்சொல் வகை வினாக்களுடனும், ஆங்கிலத்தில் துணைவினைவகை வினாக்களுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழில் வினாச்சொல்வகை வினாக்களில் வினாவை வினாப் பெயர்கள் உணர்த்துகின்றன. இவ்வினாச் சொற்கள் வாக்கியத்தின் முதல், இடை, கடை நிலைகளில் வருகிறது. "யார்" என்னும் வினாச்சொல் தவிர்ந்த ஏனைய வினாச் சொற்கள் "எ" என்னும் வினாவடியிலிருந்து உருவாகின்றன, இவ்வினாச்சொற்களில் "எவன்" "எவள்" "எவர்" "எது" "எவை என்பன என்பன பால், எண் உருபுகளை ஏற்று வருகிறது. "யார்" "எவன்", "எவள்" "எவர்" என்பன உயர்திணைக்கும் "எது" எவை", "எவ்வளவு" என்பன அஃறிணைக்கும் "என்ன" "எப்படி" ஏன், "எங்கு" " எப்போ ", "எதற்கு", "எந்த" "எத்தனை", "எங்ஙனம்", "எவ்வாறு", எம்முறை" என்பன விரவுத்திணைக்கும் வருகின்றன. வினாச் சொற்கள் தனிச் சொற்களாகவும், கூட்டுச் சொற்களாகவும், அமைந்துள்ளன. இவ்வினாக்களுக்கு ஒரு செய்தியே விடையாக அமைந்துள்ளது.

ஆங்கிலத்தில் பெயர்ச்சொல்வகை வினாக்களில், வினாவைப் பெயர்ச்சொற்கள் உணர்த்துகின்றன. வினாவை உணர்த்தும் சொற்கள் வாக்கியத்தில் முதலில் மட்டும் வருகின்றன, "How", "Howmany", "How much" என்னும் சொற்கள் தவிர்ந்த ஏனையவை "wh"–என்னும் வினாவடியிலிருந்து ஆக்கம் பெற்றுள்ளன. பெயர்ச்சொல்வகை வினாக்கள் பால் உருபுகளை ஏற்காது, எண், இடம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு வரும், பெயர்ச்சொல்வகை வினாக்களில் வினாவை உணர்த்தும் சொற்கள், தனிச் சொற்களாகவும் கூட்டுச் சொற்களாகவும் அமைந்துள்ளன. இவ்வகை வினாக்களுக்கு விடை ஒரு செய்தியாக அமைந்துள்ளது.

தமிழில் வினாச்சொல்வகை வினாக்களில் வினாவைச் சுட்டும் சொற்களும், ஆங்கிலத்தில் பெயர்ச்சொல் வகை வினாக்களில் வினாவைச் சுட்டும் சொற்களும் தனித்து (குறை) வினாக்களாக வருகின்றன.

தமிழிலும், ஆங்கிலத்திலும் மேல்பகுப்பு வடிவ வினாக்களில் ஒரு சொல்லின் பேற்பகுப்புக் கூறாகிய சுரவிசையை உயர்த்துவதால் வினா உணாத்தப்படுகின்றது. தமிழ் மேல் பகுப்பு வடிவ வினாக் களுக்கு "ஆமாம்" அல்லது "இல்லை" என்பதோடு "செய்தியும்" விடையாக அமைய, ஆங்கில மேல் பகுப்பு வடிவ வினாக்களுக்கு "ஆமாம்", அல்லது "இல்லை" என்பது மட்டுமே விடையாக அமைந்துள்ளது

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியர் வினாப் பற்றிய செய்தியினைக் கிளவியாக்கத்தில் (தொ. சொ. 13, 14, 15)சுட்டுகின்றார். ஆனால் வினா எத்தனை வகைப்படும் என்று வகைப்படுத்திக் கூறவில்லை.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் (தொ.சொ.13) வினாவினை "அறியான் வினாதல்", "அறிவொப்புக் காண்டல்", "ஐயமறுத்தல்" "அவனறிவுக் கோடல்" "மெய்யவற்குக் காட்டல்" என ஐந்து வகைப்படுத்துகின்றார்.சேனா வரையர் (தொ.சொ. 13) "அறியான் வினா" "ஐயவினா" "அறிபொருள் வினா"என மூன்று வகைப்படும் எனக் கூறுகின்றனர்.

பிற்கால இலக்கண நூலாரான நன்னூலார் (நன். 385) வினா "அறி வினா", "அறியா வினா", "ஐயுறல்", "கொளல் வினா", கொடை வினா", "ஏவல் வினா" என ஆறு வகைப்படும் என்று பொருண்மை அடிப்படையில் பகுத்துக் காட்டுகிறார்.

2. இக்காலத்தமிழில் "யார்", "எவன்". "எவள்", "எவர்", "எது", "எவை", "எவ்வளவு", "எம்முறை", "எவ்வகை" எனும் வினாச் சொற்களும் "ஆ", "ஏ", "ஓ" போன்ற இடைச்சொற்களும் வினா வாக்கியம் அமையத் துணைபுரிகின்றன.

3. சில இடங்களில் வினாச்சொற்கள், சில சொல்லுருபுகளைத் (Prepositions) தொடர்ந்து வாக்கியத்தின் இடையிலும் அமையப் பெறும்.

At what time.

## துணை நூற்பட்டியல்

1. Agesthialingom, S., 1966 "Interrogatives in Tamil SL, Vol. 27, pp. 1.20.

| | | | |
|---|---|---|---|
| 2. | Andronov, N., | 1969 | A Standard Grammar of Modern and classical Tamil. New Century Book House Ltd., Madras. |
| 3. | Arden, A. H., | 1969 | A progressive Grammar of the Tamil Language, Christian Literature Society, Madsas. |
| 4. | Bach, E., | 1971 | "Questions", L 9., Vol. 11:2 pp. 152 — 166. |
| 5. | Fries, C., | 1952 | The Structure of English, Lowe and Brydone (Printers) Ltd,, London. |
| 6. | Graham Mallinson and Barry J. Blake, | 1981 | Language Typology — Cross — Linguistic studies in syntax, North Holland Publishing company, Amsterdam. |
| 7. | Hendrick, Randall | 1982 | Reduced Questions and Thier Theoretical Implications " Lg , Vol. 58, pp.800 – 819. |
| 8. | Roberts, Paul, | 1954 | Understanding Grammar Harber and Row, Publishers, New york. |
| 9. | Shanmugam Pillai, S., | 1965 | "Interrogatives in Modern Tamil" SL, Vol. 26, pp. 139 – 145. |
| 10. | Ultan, Russell, | 1978 | "Some General Characteristics of interrogative systems" UHL, Vol.4., pp 211-248. |
| 11. | Zandvoort, R. W., | 1975 | A Handbook of English Grammer, The English Language Book Society and Longman group Ltd., London. |

## கோழியூர்க் கோவலர்

டாக்டர். இரா. கலைக்கோவன்,
எம். பி. பி. எஸ்., டி. ஜி ஓ.

வைணவர்களின் வழிபாட்டுக்குரிய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றென வைத்துப் போற்றப்படுவது திருக்கோழியூர். இத்தலம் உறையூர், உறந்தை என்று பலபெயர்களால் அறியப்படும். இன்றைய திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லைக்குள்,பழைய சிறப்பு களை இழந்த நிலையில், ஒரு குடியிருப்புப் பகுதியாக இவ்வூர் விளங்குகிறது. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இத்தலத் தில் தான் திருமங்கையாழ்வார் பாடியருளிய அழகிய மணவாளப் பெருமாளின் ஆலயம் அருள்மிகு கமலவல்லி நாச்சியார் திருக் கோயில் என்ற பெயரில் அமைந்துள்ளது.

கோயில் ஊருக்கு நடுவில், வடக்குப் பார்த்த ஒரே வாசலுடன் அமைந்துள்ளது. ஐந்து நிலைக்கோபுரத்துடன் கூடிய இந்த நுழை வாயில், ஆரியபட்டாள் வாசல் என்றழைக்கப்படுகின்றது. கோபுரத்தைச் சுதையாலும், செங்கல்லாலுமான உருவங்கள் அழகு செய்கின்றன. அடித்தளத்தில் கிழக்கிலும், மேற்கிலும் சில அழகிய சுதையுருவங்கள் அழிந்த நிலையில் உள்ளன.

கோயிலுக்குள் நுழைந்ததும் ஒரு நாற்கால் மண்டபமும் சின்ன அநுமார் திருமுன்னும் உள்ளன. மண்டபத்தின் இடப்புறப் பகுதியில், மதிலை ஒட்டிச் சேனை முதலியாருக்கென்று ஒரு உட்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மூலவராகச் சேனை முதலியார் எழுந்தருளியுள்ளார்.

கிழக்கு மதிலையொட்டி நம்மாழ்வார், இராமாநுசர், திருப்பா ணாழ்வார் என்ற வைணவ சமயப் பெரியவர்களுக்காகத் தனித் தனியே உட்கோயில்கள் அமைந்துள்ளன. நம்மாழ்வார் கோயிலுள் ஆழ்வார் பெருமான் மூலவராகவும் உற்சவராகவும் எழுந்தருளி யுள்ளார். இந்தக் கருவறையைச் சுற்றிலும் சுவர்களில் திருமாலின் தோற்றப் பெருமைகள், ஆழ்வார்களின், ஆச்சாரியர்களின் சிறப் பமைந்த வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலியன வணண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்குள்ள தூண்களில் காணப்படும் சிற்பங்கள் சிதைந்து காணப்படுகின்றன. மிக அண்மைக்காலத்தனவாகவே இருந்தபோதும், சரியான பாதுகாப்பின்மையும், பொதுமக்களின் இழி செயல்களும் இச்சிற்பங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. ஓவியங்களில் கூடச் சில பெருமக்கள் (!) தங்கள் திருப்பெயர்களைப் பொறித்துத் தங்கள் அறியாமைக்கு விளம்பரம் தேடியுள்ளனர்.

நம்மாழ்வார் கோயிலுக்குத் தெற்கில் உடையவர் இராமாநுசரின் கோயில் உள்ளது. இங்கு மூலவராயும் உற்சவராயும் இராமாநுசப் பெருமான் வீற்றுள்ளார். உறையூரில் தோன்றி, உறையூருக்கே பெருமை தேடித்தந்த திருப்பாணாழ்வாரின் கோயில், உடையவரின் கோயிலையொட்டி அமைந்துள்ளது. இப்பெருமானின் கருவறையை ஒட்டிய திருச்சுற்றில், மேற்குப்பகுதியில் ஒரு அழகிய கண்ணாடி அறை அமைக்கப்பட்டுள்ளது. இந்த அறையில் கார்த்திகை நாளில் ஆழ்வாரை எழுந்தருள வைப்பது மரபு. இம்மூன்று உட்கோயிலகளின் கருவறைகளும் தனித்தனியே விமானங்களை உடையவை. இவ்விமானங்களின் அமைப்பினைக் கோயிலினமேல் தளத்தில் சென்று பார்க்க வசதியாகப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விமானங்களும் தாயார் கருவறையின் விமானமும் சுதை, செங்கல் இவற்றால் ஆன உருவங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

வெளித்திருச்சுற்றில், குளத்துக்கு அருகில் வெள்ளிக்கிழமை மண்டபம் என்ற பெயரில் ஒரு மரமண்டபம் அமைக்கப்பட்டுளளது. இது அண்மைக் காலத்திய அமைப்பாகும். இங்கு வெள்ளிக் கிழமைகளில் நாச்சியார் எழுந்தருளுவது வழக்கம். வெளிச்சுற்றின் தெற்குப் பகுதியில் தூண்கள் பாலுணர்வுச் சிற்பங்களைப் பெற்று அமைந்துள்ளன. இச்சுற்றின் தென்மேற்கு மூலையில் ஊஞ்சல மண்டபம் அமைந்துள்ளது. இது கருங்கல் பணி. இதன் மேற்கு மூலையில், தூணில் அனைந்திருக்கும் பிள்ளையாரின் புடைப்புச் சிற்பத்துக்குத் தனியே சுவரெழுப்பி, ஒரு பெட்டகம் போல் அமைத்து வழிபாடு நடைபெற்று வருகின்றது. இந்தச் சிறு பெட்டகத்துக்குள் எட்டிப் பார்த்தால்தான் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் பிள்ளையாரின் திருவுருவம் தெரியும்.

கோயிலின் நடுநாயகமாகக் கமலவல்லி அன்னையின் கருவறையும், முன்மண்டபமும், கருடன் திருமுன்னும் உள்ளன. முன் மண்டபத்திற்குள் நுழைய, கிழக்கிலுங், மேற்கிலும் வாசல்கள் உள்ளன. கிழக்கு வாசலை வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். இந்த வாயில் வழியேதான் அருள்மிகு நாச்சியார் வருவதும் செல்வதும் வழக்கமாய் உள்ளன. இம்மண்டபத்தில் தூண் அமைப்புக்கள் மிக அழகாய்ச் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு பெருந்தூணும், இரண்டு நீண்ட மெல்லிய தூண்களும் இணைந்தே ஒவ்வொரு தூணும் அமைந்துள்ளது. அப்படி அமைந்துள்ள தூண்களுள் ஒன்றில் தெற்குப் பார்த்த நிலையில், அனுமார் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். வலக்கை உடைந்திருக்கிறது. காலும் சேதப்படுத்தப் பட்டுள்ளது. நீண்ட மெல்லிய தூண்களின் அமைப்புப் பிற்காலச்

சிற்ப அமைதியைக் கண்முன்னர் நிறுத்துகின்றது. கிழக்கு மூலையில் உள்ள ஒரு தூணில் திருப்பாணழ்வார், இராமானுசர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மணடபத்தின் வடக்கில் நடுநாயமாகக் கருடன் திருமுன் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. முன் மண்டபத்தின் தெற்கு வாசலில் நுழைந்தால் மகா மண்டபத்துக்குள் வரலாம். இதில் தாயாருக்கும் பெருமாளுக்கும் தளிகை இட ஒரு அமுதுபாறை உள்ளது. இந்த மண்டபத்தி லிருந்து உள்சென்றால் உள்மண்டபமும் கருவறையும் உள்ளன.

பெருமாள், அழகிய மணவாளக் கோலத்தில்மூல வராய்க் காட்சி தருகின்றார். ஒரு கை சக்கரத்தை எப்போதும் பயன் படுத்தக் கூடிய நிலையில் கொண்டுள்ளது. இன்னொரு கையில் சங்கும், மற்றொரு கையில் கதையும் உள்ளன. வலக்கை, 'யாமிருக்க அஞ்சுவதேன்' என்பது போல் காப்பு நிலை காட்டி அருள் செய்கிறது. நாச்சியாரும் மூலவராய்ப் பெருமாளுக்கு வலப் பக்கத்தில் அமர்ந்துள்ளார். பெருமாள் நின்று கொண்டும், தாயார் அமர்ந்து கொண்டும் காட்சி தரும் இந்நிலையைக் 'கல்யாண அவசர சேவை' என்கிறார்கள். மூலவருக்கு முன்புள்ள அரியணையில் கமலவல்லித் தாயார் உற்சவராய், அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார்.

மகாமண்டபம், உள்மண்டபம் இவற்றின் வெளிப்புறச் சுவர் களில் கோட்டப் பஞ்சரங்கள் இடம் பெற்றுள்ளன. மேற்குப்புறச் சுவரில் புண்டரீகாட்சர் கோலத்தில் திருமாலின் சிற்பம் காணப்படு கிறது. அதையும் சுவர் கட்டி மறைத்துப் பெட்டகக் கோயிலாய்ப் பிற்காலத்தில் மாற்றியிருக்கிறார்கள். இக்கோயிலில் கல்தூண் களிலும், வெள்ளிக்கிழமை மண்டபத்தின் மேற்பரப்பிலும் அமைந் துள்ள சிற்பங்களுள் பல பாலுணர்வுச் சிற்பங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. காதல் திருமணம் நடந்த இடமென்று தல வரலாறு கூறுவதால் வாழ்வியல் இன்பத்தை விளக்கும் சிற்பங் களையே சிற்பிகள் விரும்பி அமைத்தனர் போலும்.

இக்கோயிலைப் பற்றிய கதையொன்று உண்டு. இலக்குமி தேவியே கமலவல்லி நாச்சியாராய் உறையூரில் ஒரு தாமரை ஓடையில் பெண் குழந்தையாய்த் தோன்ற, குழந்தையில்லாத நந்தசோழன் அப்பிள்ளையை எடுத்து, கமலவல்லி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தான். வயது வந்த நிலையில் அப்பெண் தன் தோழிய ருடன் நந்தவனத்தில் பூக்கொய்துகொண்டிருந்தபோது அங்கு வந்த திருவரங்கநாதனைக் கண்டு காதலுற்று நிறையழிந்தாள். சோழன், மகள் நிலையறிந்து, திருவரங்கப் பெருமானை அவளுக்கு

மணம் செய்வித்து அனுப்பினான். கமலவல்லி, திருவரங்கம் கோயிலில், வந்து திருமணத் தூணுக்குள் புகுந்ததும் அரங்கநாதர் திருவடிகளில் ஐக்கியமாகி மறைந்தாள். கமலவல்லியுடன் வந்த தோழியரின் வழியினர் திருவரங்கக் கோயிலில், 'உறையூர் வல்லிக் கூட்டத்தார்' என்ற பெயரில் திருத்தொண்டு செய்து வருகிறார்கள். கமலவல்லி மறைந்து போனது கண்ட சோழன் தன் சொத்துக் களைத் திருவரங்கக் கோயிலுக்கு எழுதி வைத்தான். தன் மகளுக்கும், அழகிய மணவாளனுக்கும் உறையூரில் ஒரு கோயில் கட்டினான். ஒரு காலத்தில் உறையூரில் மண்மாரி பெய்தபோது உறையூரே மண்மூடிப்போய் இக்கோயிலும் அழிந்து போயிற்று பின்னர் வந்த சோழன் ஒருவன் உறையூரில் கோயில் கட்டிப் பெருமாளையும், நாச்சியாரையும் அங்கு எழுந்தருளி வித்தான். இக்கதையை உறையூர் கமலவல்லித் தாயார் சந்நிதி வைபவம் என்ற நூலும், திருவரங்கக் கோயிலின் 'கோயிலொழுகு' என்ற நூலும் எடுத்துரைக்கின்றன.[1]

இக்கோயிலொழுகு நூலின் முன்னுரையிலேயே, 'ஸ்ரீரங்கம் கோயில் அதிகாரிகளால் செவிவழிச் செய்திகளையும், கல்வெட்டுக் களையும் கொண்டு அவ்வப்போது தொகுக்கப்பட்டு உருவான நூல் இது!' என்று சொல்லப்படுவதால், நந்தசோழன் கதை செவி வழிச் செய்தி என்பதை உணர்தல் எளிது. வரலாற்று அடிப்படை யில் இக்கோயிலைப் பற்றி நமக்குக் கிடைக்கும் முதல் குறிப்பு திருமங்கையாழ்வாரின் பாடல்தான். பெரிய திருமொழியில் நாகை சுந்தரராசப் பெருமாள் வடிவழகில் ஈடுபட்டு வியப்படைந்து 'அச்சோ ஒருவரழகியவா' என்று புகழ்ந்து பாடத் தொடங்கிய ஆழ்வார், சுந்தரராசப் பெருமாள், அழகில் யாருக்கு ஒப்பாயுள்ளார் என்பதைச் சொல்ல நினைத்தபோது, "கோழியும் கூடலும் கோயில் கொண்ட கோவலரே அப்பர்"[2] என்று அருளிச் செய்தார். அஃதாவது கோழியூராகிய உறையூரில் எழுந்தருளி யிருக்கும் அழகிய மணவாளரும் கூடல் அழகருமே நாகை சுந்தர ராசப் பெருமாளுக்கு ஒப்பாவார் என்றார். இப்பாடல் வரி திருமங்கையாழ்வார் காலத்தில் உறையூரில் அழகிய மணவாளப் பெருமாளுக்கென்று ஒரு கோயில் இருந்ததைத் தெரிவிக்கின்றது. நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றெனப் போற்றப்படும் உறையூரில், கமலவல்லி நாச்சியார் கோயிலைத்தவிர வேறு

1: உறையூர் கமலவல்லித் தாயார் சந்நிதி வைபவம், எஸ். நரசிம்ம அய்யங்கார், பக். 10 13 கோயிலொழுகு, கிருஷ்ணசாமி அய்யங்கார், பக். 4

2, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பு) பெரிய திருமொழி, திருமங்கையாழ்வார், பக். 378. (பாடல் எண் ; 1762.)

வைணவத் தலம் இல்லை. இங்குள்ள இறைவன் அழகிய மணவாளராய்த் திருமணக் கோலத்தில் காட்சி தருவதும் நினைவு கொள்ளத்தக்கது.

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள், திருமங்கை யாழ்வாரின் காலத்தைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளார்கள்.[3] கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே இக்கோயில் உறையூரில் இருந்ததென்றால், இதை யார் எழுப்பியது, எப்போது எழுப்பினார்கள் என்ற வினாக்கள் எழுகின்றன.

சங்காலத்தில் உறையூரில் இக்கோயில் எழுப்பப்பட்டிருக்கு மாயின், அது சோழர்களைப் பற்றிய சங்கப்பாடல்களில் எங்கேனும் ஓரிடத்திலாவது குறிக்கப் பெற்றிருககும். அவ்வாறான சான்றுகள் ஏதும் இல்லையென்பதால், இக்கோயில் இடைக்காலத்தில், கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டிற்குள், சைவமும், வைணமும் பிற சமயங்களின் எழுச்சியால் ஒடுக்கப் பட்டிருந்த காலக்கட்டத்தில், வைணவத்தின் பெருமையை நிலை நாட்ட எழுப்பப்பட்டதாக இருக்கலாம் என்று கருதுவது பொருத்த மானது. இந்த இடைக்காலத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டியதாக அறியப்படும் ஒரே வேந்தன் சோழன் கோச்செங்கணான்தான். காவிரியின் இருகரைகளிலும் பல கோயில்களை எழுப்பிய மன்னன் அவன். இதையும் திருமங்கை யாழ்வார் வாயிலாகவே அறிகிறோம். கோச்செங்கட் சோழன் சைவனாயிற்றே. அவன் பெருமாள் கோயில் எழுப்பியிருக்க முடியுமா என்ற கேள்வி எழலாம். அதற்கும் திருமங்கை யாழ்வாரின் பெரிய திருமொழியே விடையளிக்கின்றது. திருநறையூர் பதிகத்தில் வரும்,

"செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"[4]

என்ற வரிகள் கோச்செங்கட் சோழன் திருநறையூர்ப் பெருமாளிடம் கொண்டிருந்த ஈடுபாட்டைக் குறிப்பதாகப் பெரியவாச்சான் பிள்ளையவர்களும்,[5] பேராசிரியர் மு. இராகவைய்யங்கர் அவர்களும்[6] கூறுகின்றார்கள். திருநறையூர்ப் பதிகத்தில் வரும் பத்துப்பாடல் களும், சோழன் கோச்செங்கணனின் வீரத்தை, அவனைப் பற்றிய

3. ஆழ்வார்கள் காலநிலை, மு. இராகவைய்யங்கார், பக்-89.
4. நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பு, பெரிய திருமொழி, திருமங்கையாழ்வார், திருநறையூர்ப் பதிகம், பக்-328 பாசுர எண்: 1505
5. ஆழ்வார்கள் காலநிலை, மு. இராகவையங்கார், பக். 127.

வரலாற்றுக் குறிப்புக்களை, அம்மன்னனின் திருமால் ஈடுபாட்டை உணர்த்துவானகவே அமைகின்றன. இப்பதிகம் திருநறையூர்ப் பெருமாள் கோயிலைக் கட்டியவன் கோச்செங்கட் சோழனே என்று நிறுவுகிறது. இதையே 'சிவ வழிபாட்டில் ஈடுபட்டுச் சிவபெருமானுக்கு ஆலயங்கள் அமைத்த கோச்செங்கட் சோழன் முடிவில் திருநறையூர்த் திருமாலுக்கு அடியவனாய்ச் சிறப்படைந் தான்' என்று பாசுர விளக்கம் செய்தார் திரு. பெரியவாச்சான் பிள்ளையவர்கள். திருநறையூரில் பெருமாளுக்கு ஒரு கோயிலை எழுப்பிய கோச்செங்கட் சோழன் தன் வளநாடான உறையூரிலும் ஒரு பெருமாள் கோயிலை எழுப்பியிருத்தல் இயலக் கூடியதே. கோயிலொழுகு நூலில் இக்கோயிலைக் கட்டியதாகச் சொல்லப் படும் பெயர் தெரியாத சோழன்[7] கோச்செங்கட் சோழனாகவே இருத் தல் வேண்டும். இதற்கு இன்னொரு காரணமும் ஆதரவாய் இருப்பது கவனிக்கத் தகுந்தது. இவ்விரண்டு கோயில்களுமே இப்போது நாச்சியார் திருக்கோயில்களாக விளங்குகின்றன. பிற்காலச் சோழர் களின் காலத்தில் தான் அம்மனுக்கென்றும், தாயாருக்கென்றும் தனிப் பட்டதிருமுன்கள் ஏற்பட்டன. திருநறையூர்ப்பதிகத்தில் பெருமாளைப் பாடும் திருமங்கையாழ்வார், நாச்சியார் கோயிலாக அப்போது அது வழங்கப்பட்டிருக்குமானால் அதைக் குறிப்பிடத் தவறியிரார். பதிலாக அதை நறையூர் நம்பியின் மணிமாடக் கோயில் என்றே குறிப்பிடுகிறார். எனவே, பெருமாளுக்காகவே எழுப்பப்பட்ட இக்கோயில்கள் மிகப் பிற்பட்ட காலத்தில்தான் நாச்சியார் கோயில் களாகப் பெயர் மாற்றும் பெற்றிருக்க வேண்டும்.

கோச்செங்கணன் எடுப்பித்த இக்கோயில் அக்காலக் கட்டிட அமைப்பின்படி மண், செங்கல் மரம் இவற்றாலேயே அமைக்கப் பட்டிருக்க வேண்டும். காலப்போக்கில் இக்கோயில் சிதைந் திருக்கலாம். சோழப்பேரரசர்களுள் குறிப்பிடத்தக்கவனான முதலாம் ஆதித்த சோழன் பல மண்தளிகளைக் கற்றளிகளாக மாற்றியமைத்த செய்தியை அன்பில் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. அப்படி மாற்றியமைக்கப்பட்ட அல்லது திருப்பணி செய்யப்பட்ட கோயில் களுள் ஒன்றாக உறையூர் மணவாளப் பெருமாள் கோயில் இருந்திருக்கலாம். கிருஷ்ண தேவராயர் காலத்தில் தான் கோயில் களில் நாச்சியாருக்கென்று தனிக்கருவறைகளும், மண்டபங்களும் ஏற்பட்டனவென்று கோயில்கலை வரலாற்று வல்லுநர்கள் கருது கின்றனர். அவர் வழி வந்த நாயக்க மன்னர்களே இந்த உறையூர் மணவாளப்பெருமாள் கோயிலையும், இங்கு வழங்கி வந்த கதைக்கு முக்கியத்துவம் தருவது போல் நாச்சியார் திருக்கோயிலாக மாற்றி யமைத்திருக்க வேண்டும் என்று கொள்வது தவறாகாது.

6. ஆழ்வார்கள் காலநிலை, மு. இராகவையங்கார், பக். 127
7. கோயிலொழுகு, கிருஷ்ணசாமி அய்யங்கார், பக். 5.

# கற்பனையால் ஆம் கட்டு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**டாக்டர் மொ. துரை அரங்கசாமி,**
எம்.ஏ.எம்.ஓ.எல்.,பிஎச்.டி.,

(காரண சரீர வியஷ்ட்டி அபிமானி, அவித்தியோபாதிகன், காரியோபாதிகன் என்றற்றொடக்கத்தன பிராஞ்ஞநது வேறு பெயர்களாம்.)

அவித்தையில் நிழலிட்டுள்ள (பிரதிபலித்துள்ள) உயிர்த் தொகுதிகட்கு அதுவே உறக்கநிலையும், கருவுடலும், இன்பவடிவ உறையுமாம்.

இதுகாறும் அவ்யத்தத்தின் செயற் பாடான சத்துவ குண வடிவ மாயையாலும், இரசோ குணவடிவ அவித்தையாலும் உண்டான கருவுடல் கற்பனை கூறப்பட்டது. இனிக் கூறும் நுண்ணுலகக் கற்பனை முறைமையும் கேட்கத் தக்கதாகும்.

## 8 நுண்ணுலகக் கற்பனை முறைமை :

### அ. ஆற்றல் அல்லது சக்தி

கற்பனை வடிவ மாயையினால், உலகப் படைப்பு முதலிய வற்றைத் திருவிளையாடலாகவுடைய இறைவன் திருவருளால் அவித்தையில் வினைப்பயன் பதிவுகளோடு நிழலிட்டிருக்கும் உயிர்கட்கெல்லாம் துய்த்தற்குக் கருவியான நுண்ணுடல்கள் உண்டாதற் பொருட்டு (எஞ்சி நின்ற) இருட்குண முதன்மை யுடைய மாயையானது, மறைப்பு (ஆவரணம்), தோற்றம் (விட்சேபம்) என்று இரண்டு ஆற்றல்களாகப் பிரிந்தது. ஆற்றல் எனினும் சக்தி எனினும் ஒக்கும்.

### ஆ. ஐந்து நுண்பூதங்கள்

அவற்றுள் தோற்றமாம் ஆற்றலிலிருந்து ஓசைத் தன் மாத்திரையான விண்ணும் (ஆகாயமும்), விண்ணிலிருந்து ஊற்றுத் தன்மாத்திரையான (பரிச தன் மாத்திரையான) காற்றும், காற்றி லிருந்து ஒளித் தன்மாத்திரையான தீயும், தீயிலிருந்து சுவைத் தன்மாத்திரையான நீரும், நீரிலிருந்து நாற்றத் தன்மாத்திரை யான மண்ணும் உண்டாயின. இந்த ஐந்தும் நொய்ய அல்லது நுண் பூதங்கள் (சூட்சும பூதங்கள் அல்லது அபஞ்சீகிருத பூதங்கள்) என்னும் பெயரை உடையனவாம். இவற்றினின்றும் போக சாதனம் (புலப்படத் தோன்றும் இன்ப துன்பங்களை நுகர்தற்குக் கருவி) என்னும் நுண்ணுடல்கள் (சூட்சும சரீரங்கள்) தோன்றும்.

ஈண்டொன்று நுணுகி நோக்கத் தக்கதாகும். தோற்றமாம் ஆற்றலிருந்தும் விண்ணும், அதிலிருந்து காற்றும் முதலியன தோன்றும் என்று கூறியது பருப் பார்வையாலாம் (ஸ்தூல திருஷ்டியாலாம்). எல்லாக் கற்பனைகட்கும் (ஆரோபங்கட்கும்) இடமாவது (அதிஷ்டாவமாவது) அறிவே வடிவான பொருள் (சேதனம்) அன்றிப் பிறிதொன்றன்று என்பதும், ஒரு கற்பனைப் பொருள் மற்றொரு கற்பனைப் பொருளுக்கு இடமாவது யாண்டும் இன்றாம் என்பதும் நூல் முடிபுமாதலால், மாயையின் தோற்ற ஆற்றலோடு கூடிய சேதனத்தினின்று விண்ணும், விண்ணொடு கூடிய சேதனத்தினின்று காற்றும், காற்றோடு கூடிய சேதனத் தினின்று தீயும், தீயொடு கூடிய சேதனத்தினின்று நீரும், நீரொடு கூடிய சேதனத்தினின்று மண்ணும் உண்டாயின என்று கொள்ளு தல் வேண்டும்.

முற்கூறிய மகத்தத்துவம் முதலியவற்றின் படைப்பிலும் இனிக் கூறப்படும் படைப்பு முறைகளிலும் இவ்வாறே நுட்பமாய் உணர்தல் வேண்டும்.

> "மாயையோடு விரவுமந்தச் சிவத்தினின்றும் பழுதைமா கணமே போல
>
> ஆயவபஞ் சீசிருத சூக்குமவா காயமுமற் றதினிருந்து
>
> வாயுவுமற் றதினழலும் அதிற்சலமும் அதினிருந்து வயங்கு மண்ணும்
>
> பாயவபஞ் சீகிருத மாகவே அம்மா வுற்பத்தியான"

என்பது சூதசங்கிதை.

காரணமான மண்ணின் கருமை அதன் காரியமான குடம் முழுவதும் தொடர்ந்திருப்பது போன்ற—காரணமான, இருட்குண மிகுதியான (தமோகுணப் பிரதானமான) மாயையின் தத்துவம் முதலிய மூன்றும், காரியமான இந்த நுண்பூதம் முற்றும் தொடர்ந் திருக்கும்.

### அ(1) அ ஐம்பொறிகள்

நுண்பூதங்களின் தூயசத்துவ குணத்தினின்று செவி, கண், மூக்கு, வாய், மெய் என்னும் அறிபொறிகள் ஐந்தும், அகக்கருவி (அந்தக்கரணம்) என்னும் மனமும், புத்தியும் ஆகிய ஏழும் உண்டாயின. இந்த ஏழும் சத்துவ குணத்தினின்றும் உண்டாயினமையின் அறிவதற்கு உரிய கருவிகளாம் (ஞான சாதனங்களாம்).

## இரசோகுணம் உள்வளிகளும் தொழிற்கருவிகளும்

முற்கூறிய நுண்பூதங்களின் அழுக்கான இரசோ குணத்தினின்றும் (பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்னும்) உள்வளிகள் ஐந்தும் (வாய், கை, கால், எருவாய், கருவாய் என்னும்) தொழிற் கருவிகள் ஐந்தும் உண்டாயின.

அறிபொறிகள் ஐந்தும், அகக்கருவிகள் இரண்டும்; உள்வளிகள் ஐந்தும், தொழிற் கருவிகள் என்னும் ஐந்தும் இப்பதினேழு பொருள் களும் (தத்துவங்களும்) தேவர், அரக்கர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் எனத் தோன்றிய உயிர்த் தொகுதிகள் எல்லாவற்றிற்கும் நுண்ணுடம்புகளாம்.

தொய்ய பூதங்களின் சத்துவ குணத்தொகுதி (சமஷ்டி) யிலிருந்து அகக்கருவியும், தனிமை (வியஷ்டி) யினின்று அறிபொறிகள் ஐந்தும் உண்டாயின என்று அறிதல் வேண்டும். சித்தத்தை மனத்திலும், அகங்காரத்தைப் புத்தியிலும் அடக்கி அகக்கருவிகள் இரண்டெனக் கூறப்பட்டன.

நொய்ய பூதங்களின் இரசோ குணத் தொகுதி (சமஷ்டி) யிலிருந்து உள்வளிகள் ஐந்தும், தனிமை (வியஷ்டி) யிலிருந்து தொழிற் கருவிகள் ஐந்தும் உண்டாயினவென்று அறிதல் வேண்டும்.

## நிலையும் இறைவனின் பெயர்களும்

இந்த நுண்ணுடலில் பொருந்திய சீவனும் இறைவனும் முறையே தைஜசன் (பருதி முதலிய ஒளிப் பொருள்களின்றியும் விளங்குபவன்) என்றும், இரணிய கர்ப்பன் (பருப்பூதத் தோற்றத் திற்குக் காரணமான உடம்புடையவன்) என்றும் சொல்லப்படுவர்.

நுண்ணுடல் தனிமையில் (சூட்சும சரீரத்தின் வியஷ்டியில்) பொருந்தியவன் சீவன் எனவும், நுண்ணுடல் தொகுதியில் பொருந்தியவன் இறைவன் எனவும் கொள்ளவேண்டும்.

பதினேழு தத்துவ (பொருள்களின்) வடிவமான இந்த நுண்ணுடல், சீவன், இறைவன் இருவருக்கும் இலிங்க தேக மென்னும் பெயரையுடைய நுண்ணுடலாம். இதுவே (வளியுறை- பிராணமய கோசம், மனஉறை — மனோமய கோசம், அறிவுறை— விஞ்ஞானமய கோசம் என) மூன்று உறையாம் (கோசமாம்); கனவு நிலையாம்.

சூட்சும சரீர வியட்டியபிமானி, பிராதிபாசிக ஜீவன், சொப்பன கற்பிதன் என்றற்றோடக்கத் தனதை ஜசனது பரியாய நாமங்களாம். இலிங்க சரீர சமஷ்டி அபிமானி, மகாப் பிராணன், சூத்திரான்மா என்றற்றொடக்கத்தன இரணிய கர்ப்பனது பரியாய நாமங்களாம்.

இதுவரையில் நுண்பூத நுண்ணுடல்களில் கற்பனை (அத்தியாசம்) கூறப்பட்டது. இனிப் பருவுடல் முதலிய உலகப் படைப்பின் கற்பனையை நோக்குவோம்.

## C) பருவுடல் முதலிய உலகப் படைப்பின் கற்பனை

### (1) பஞ்சீகரணம்

நுண்ணுடல்களோடு கூடிய உயிர் வகைகட்கு அதனதன் செய்வினைப் பயனுக்குத் தக்கவாறு பருவுடல்களும், அவ்வப் பருவுடல்களுக்குத் தகுதியான நுகர்ச்சிகளும் உண்டாதற் பொருட்டு, எவ்வுயிரையும் வேற்றுமையின்றிப் பாதுகாக்கும் இறைவன், இருட்குணம் (தமோகுணம்) உடைய நுண்பூதங்கள் ஐந்தையும் பஞ்சீகரணம் செய்தான். ஐந்து நுண்பூதங்கட்கும் ஒன்றற்கொன்று உண்டாகும் ஒருவகைக் கலப்பே பஞ்சீரணம் எனப்படும்.

முற்கூறிய விண்முதலிய ஐந்து நொய்ய பூதங்களுள், ஒவ்வொன்றையும் சமமாகஇரண்டிரண்டு பகுதியாக்கி (அஃதாவது பத்துப் பகுதியாக்கிப் பின் அவற்றின் ஒவ்வொரு பகுதியாக்கிப்) பின் அவற்றின் ஒவ்வொரு பகுதியை வாளா வைத்து, மற்றை ஒவ்வொரு பகுதியையும் நந்நான்கு பகுதிகளாகச் செய்து, வாளா வைத்த பெரிய அரைப்பாகங்களில், தத்தம் பகுதியை விட்டு, மற்றை நான்கு பூதங்களின் அரைப் பகுதியுடன், பகுதிகளாக்கின நந்நான்கையும் முறையாகச் சேர்க்க, அதனால் பருப்பூதங்கள் உண்டாயின. இதுவே ஐந்து நுண்பூதங்கள் கலப்பாகிய பஞ்சீகரணமாம்.

### 1) அ. பதினான்கு உலகங்கள் முதலியன

இவ்வாறுண்டான பஞ்சீகிருதப் பெரும்பூதங்களாகிய இவற்றினின்றும் இறைவனால் பெரிய அண்டமும் (பிரமாண்டமும்) பதினான்கு உலகங்களும், உயிர்களது நுகர்ச்சிக்குத் தகுதியான உண்வு முதலியவைகளும், நுகர்ச்சிக்கு இடமான சராயுஜ,அண்டஜ, சுவேதஜ, உற்பீஜம் (உற்பிஜ்ஜம்) என்னும் நால்வகைப் பிறப்பாகிய தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் பருவுடல்கள் படைக்கப்பட்டன.

பதினான்கு உலகங்களாவன : அதலம், விதலம், சிதலம், தராதலம்,, ரசாதலம், மகாதலப், பாதாளம் என்னும் கீழேழ் உலகங்களும், பூலோகம், புவர் லோகம், சுவர் லோகம், மகர் லோகம், ஜன லோகம், தபலோகம், சத்திய லோகம், என்னும் மேலேழ் உலகங்களுமாம்.

சராயு அல்லது (கருப்) பையிலிருந்து உண்டாவது சராயுஜம் எனப்படும். ஜம் என்றால் தோன்றுதல் என்று பொருள். மக்கள், ஆடு, மாடு முதலியவற்றின் உடல்கள் சராயுஜங்களாம்.

அண்டம் அல்லது முட்டையிலிருந்து உண்டாவது அண்டஜம் எனப்படும், பறமை, பாம்பு முதலியவற்றின் உடல்கள் அண்டஜங்களாம்.

சுவேதம் அல்லது வியர்வையிலிருந்து உண்டாவது சுவேதஜம் எனப்படும். பேன், கொசுகு முதலியவற்றின் உடல்கள் சுவேதஜங்களாம்.

மண்ணைப்பிளந்துகொண்டு உண்டாவது உற்பீஜமாம். மரம் முதலியவற்றின் உடல்கள் உற்பிஜ்ஜங்களாம்.

பெரும்பான்மையாகச் சத்துவம் மிகுதியான உடல், தேவ உடலாம்; இராசசம் மிகுதியான உடல், மக்கள் உடலாம்; தாமசம் மிகுதியான உடல், விலங்கு, பறவை முதலியவற்றின் உடலாம்.

## நிலைகளும் இறைவனின் பெயர்களும்

இந்த பருவுடலில் பொருந்திய சீவனும் இறைவனும் முறையே, விசுவன் எனவும், வீராட்புருடன் எனவும் கூறப்படுவர். பருவுடலே உணவு வடிவ உறையாம் (அன்னமய கோசமாம்); அகக்கருவியும், புறக்கருவியும் முழுமையாகச் செயலாற்றும் விழிப்பு நிலையாம். (சாக்கிராவஸ்தையாம்) அஃதாவது, பருவுடல் விழிப்புநிலை நிகழ்வதற்கு இடமாம். இவ்வாறே, கருவுடல், உறக்கநிலை நிகழ்வதற்கு இடமாம் எனவும், நுண்ணுடல் கனவுநிலை நிகழ்வதற்கு இடமாம் எனவும் அறிதல் வேண்டும்.

பருவுடல் தனிமையில் பொருந்தியவன் சீவன் எனவும், பருவுடல் தொகுதியில் பொருந்தியவன் இறைவன் எனவும் கொள்ள வேண்டும்.

ஸ்தூல சரீர வியட்டி அபிமானி, வியாவகாரிக ஜீவன், புத்திப் பிரதிபலித சைதன்னியன், சிதாபாசன், விட்சேப ரூபன், க்ஷேத்திரஞ்ஞன், சரீரி, பிரமாத்ரு, கர்த்ரு, போக்த்ரு, சம்சாரி, விஷயி, பாவாத்மா, விஞ்ஞான மயன், துவம் பதார்த்த முக்கியார்த்தன்,

என்றற்றொடக்கத்தன விசுவனது பரியாய நாமங்களாம். விசுவன் என்பதன் பொருள் உடல் பொறி முதலியவற்றில் விரிந்து நிறைந்து இருப்பவன் என்பதாம்.

ஸ்தூல சரீர சமஷ்டி அபிமானி, வைராஜசன், என்றற்றொடக்கத்தனபரியாய நாமங்களாம். விராட்புருடன் என்பதன் பொருள் நிலைத்திணை. இயங்குதிணை வடிவ உலகத்தை உறுப்பாக உடையவன் என்பதாம்.

பருவுடற் கற்பனையின் சுருக்கம் ஈதேயாகும்.

ஈண்டுக் கூறிய படைப்புள், இறைவன், மகத்தத்துவம் முதல் இரணிய கருப்பரது உடற்படைப்பு வரையில் நேரே முதல்வனாம்; ஏனையவற்றின் படைப்பில், இரணிய கருப்பர் வாயிலாக அவன் முதல்வனாம்.

அவ்வியக்கம் முதல் இருட்குண மிகுதியான மாயை ஈருயுள்ளவை அவ்வியாசிருதம் என்றும், அபஞ்சீகிருத பஞ்சமா பூதங்கள் (தன்மாத்திரைகள்) அவற்றின் காரியமாகிய நுண்ணுடல் (சூக்கும சரீரம்) என்னும் இவை அமூர்த்தம் என்றும், பஞ்சீகிருத பஞ்சமாபூதங்கள் அவற்றின் காரியம் என்னும் இவை மூர்த்தம் என்றும் கூறப்படும்.

இறைவனது பருவுடல் நுண்ணுடல் கருவுடல் ஆகிய விராட்டு, இரணிய கருப்பம், அவ்வியாகிருதம் என்பவற்றுள், அயன் விராட்டிலும், அரி இரணியகருப்பத்திலும், அரன் அவ்வியா கிருதத்திலும் அடங்குவர்.

ஈண்டொன்று கூர்ந்து நோக்கிக் கருத்தில் இருத்திக் கொள்ளுதற்கு உரியதாம்.

## இறைவன், சிவன், உபாதி

கருவுடற் கற்பனை கூறிய விடத்தில், இறைவனுக்கு உடல் மாயையாமென்றும், சீவனுக்குடல் அவித்தையாம் என்றும் பிரித்துக் கூறினமையின், இறைவனுக்கும் சீவனுக்கும் உபாதி வேறு வேறாம் என்பது பெறப்பட்டது. உபாதியாவது ஒருபொருளைப் பலபொருள் போற் காட்டுதற்குக் கருவியாயிருப்பதாம்.

நுண்ணுடல், பருவுடல் கற்பனையில் உபாதி வேறு வேறாகக் கூறப்படவில்லை. எனினும், நுண்ணுடல் தொகுதியும், பருவுடல் தொகுதியும் இறைவனுக்குக் காரணோபாதி எனவும், நுண்ணுடல் தனிமையும், பருவுடல் தனிமையும் சீவனுக்குக் காரியோபாதி

எனவும் கொள்ளவேண்டும் என்றும் அவற்றால் அவர்கட்கு வேற்றுமை உண்டென்று கொள்ளவேண்டுமென்றும் உணர்த்தப் பட்டன தொகுதி காரண வடிவமென்றும், தனிமை காரிய வடிவ மென்றும் கருதப்படும்.

## படைப்பும் இருள்திசை காலம் என்பனவும்

இதுகாறும் கூறிய படைப்பு முறையில் இருள், திசை, காலம் இவற்றின் படைப்புப் பற்றி ஒன்றும் குறிக்கவில்லையே என்ற ஐயம் எழலாம்.

கட்பொறி அறிவிற்குப் பகையாயும், ஒளியால் அழிவதாயும், மின்னல் முதலியன போன்று விரைவில் தோன்றி அழியும் தன்மை யதாயும் ஊறு (ஸ்பரிசம்) இன்றி உருவம் உடையதுமான இருள், வினைப்பயன் நுகர்ச்சிக்குக் காரணமாகாதிருத்தலின், அதன் தோற்றம் பற்றிக் கூறவில்லை.

விண்னே (ஆகாயமே) பொருள்களின் இருப்புநோக்கித் திசை என்று கூறப்படுவதால் அதைப்பற்றியும் கூறப்படவில்லை.

எல்லாக் கற்பனைக்கும் கருவியான அவித்தையே காலக் கிளவியால் கூறப்படுதலால் அதுபற்றி அதன் தோற்றம் கூறப்பட வில்லை. பொருள்களின் புடை பெயர்ச்சியே முன்பின் நோக்கம் பற்றிக் காலம் எனக் கூறப்படுதலால் காலம் என்பதற்குப் பொருள், பொருள்களின் புடைபெயர்ச்சியே யன்றி வேறின்றாம் என்று கூறுவாரும் உளர்.

## ஆவரணசக்தி எனும் மறைப்பாற்றல்

இருட்குண மிகுதியான மாயையானது மறைப்பு, தோற்றம் என்னும் இரண்டு ஆற்றல்களாய் (சக்திகளாய்)ப் பிரிந்து நிற்கும் என்று கூறி இதுகாறும் தோற்றமாம் ஆற்றல் செய்யும் விண் முதலிய உலக வடிவ காரியம் கூறப்பட்டது. இனி மறைப்புச் சத்தி (ஆற்றல்) செய்யும் செயலும் அறியத் தக்கதாகும். இந்த மறைப்பாற்றல், ஆவரண சக்தியென்றும், மூடலாம் சக்தி என்றும் கூறப்படும்.

### அ. மயக்குவது

இந்த மறைப்பாற்றல், எல்லாம் அறிதல் முதலான குணங் களாலே தனக்கு ஒப்பும் உணர்வும் இன்றிய இறைவனையும், தமது உண்மை வடிவினை உள்ளவாறு அறிந்த அறிவோர் களையும் மறையாது, வான், நிலம், திசைகள் முதலியவற்றை விழிக்குத் தோன்றாதவாறு, மறைக்கின்ற கார்காலத்து இருள்

போல, உடலுக்குள் உயிரென்பதொன்றில்லை. (நாஸ்தி), அஃதிருந்தால் தோன்றாதா (நபாதி) என்று பேசித்திரிகிற சீவர்களின் அறிவுவிழி குருடாம் வண்ணம் அதை மறைக்கும். அதுவே மறைப்பாற்றல் செய்யும் மயக்கமாம்.

**ஆ. பிறவிப்பிணிக்கு கருவி**

யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் பெரிய பொருளாம் இறைக்கும் (பிரஹ்மத்திற்கும்) இஃது என்று சுட்டியறிவதாயுள்ள, உலகத்திற்கும், பெரிய பொருளாம் இறையினும் வேறாகாது அறிவே வடிவாயுள்ள கூடஸ்தனுக்கும், நான் என்னும் அறிவிற்குப் புலனாயுள்ள அகங்காரம் முதலிய தத்துவங்கட்கும் உள்ள வேறுபாடு அறிவுக் கண்ணிற்குச் சிறிதும் விளங்காதபடி அவ்வேறு பாட்டினை மறைப்பாற்றல் (ஆவரண சக்தி) மறைக்கின்றது. இங்ஙனம் மறைப்பதால் இது பிறவிப் பிணிக்குக் கருவியாகின்றது.

## மறைப்பாற்றல் பற்றிய ஐயம் – (1)

ஈண்டோரையம் எழலாம். "மிக்க இருளினாற் கயிறு மறைந்து விடுவது போல், மறைப்பாற்றலால் எல்லாவற்றிற்கும் இடமான (ஆதாரமான) பெரிய பொருள் (பிரஹ்மம்) பார்வைக்குத் தோன்றாமல் மறைந்து போமாயின், கற்பனை (ஆரோப) வடிவ உலகம் எவ்வாறு தோன்றும்? நண்பகல் வெயிலுள்ள கயிறுபோல, இடமான (ஆதாரமான) பெரிய பொருள் மறைபடாது தோன்றுமாயின் கற்பனை வடிவ உலகம் (கயிற்றரவு போலத்) தோன்ற மாட்டாதே" என்றால் ஆதாரம் (கற்பனைப் பொருளுக்கு இடம்) பொது என்றும், சிறப்பு என்றும், இருவகைப்படும். அவற்றுள் மிகுந்த இடத்திலும், மிகுந்த காலத்திலும் உள்ள ஆதாரம், பொது (சம) ஆதாரமாம்; குறைந்த இடத்திலும், குறைந்த காலத்திலுமுள்ள கற்பனை (ஆரோப) ஆதாரம், சிறப்பு ஆதாரமாம். இவற்றுள் மறைப்புச் சக்தி, பொது ஆதாரத்தை மறைக்காது ; சிறப்பு ஆதாரத்தைத் தான் மறைக்கும்.

மங்கிய இருளில் கயிற்றை அறியாமையினால், அதனிடத்துப் பாம்பு தோன்றியவிடத்து, 'இது பாம்பு' என்று உணரப்படுகின்றது ; கயிற்றை அறிந்தபோது 'இது கயிறு' என்று உணரப்படுகின்றது. ஈண்டு இது என்பது சம (பொது) ஆதாரமும், கயிறென்பது விசேட (சிறப்பு) ஆதாரமும் பாம்பென்பது ஆரோபமும் (கற்பனையும்) ஆம். தோன்றிய பாம்பு கயிற்றின் கண்ணதாகலின், கயிறு பாம்பிற்கு ஆரோப ஆதாரமாம். இவ்விசேட ஆதாமராகிய கயிறு அதிஷ்டானம் எனப்படும்.

இது என்னும் பொது (சம) ஆதாரமும், கயிறென்னும் சிறப்பு (விசேட) ஆதாரமும் ஒன்றே (கயிறே) யாய்இருப்பினும், சம ஆதார மான'இது', இது பாம்பு' என்னும் மயக்க காலத்திலும் 'இது கயிறு' என்னும் தெளிவுக் காலத்திலும் விளங்குவது பற்றியும், விசேட ஆதாரம் மயக்க காலத்து விளங்காது தெளிவு காலத்து விளங்குவது பற்றியும் அவ்விரண்டற்கும்வேற்றுமை கற்பித்துக் கூறப்பட்டது.

எது மயக்க காலத்தும், மயக்க நீக்க காலத்தும் தோன்று கின்றதோ அது சம ஆசாரமாம்.

எது மயக்ககாலத்துத் தோன்றுவது இல்லையோ, எதன் தோற்றத்தால், மயக்கம் நீங்குகின்றதோ, அது விசேட ஆதாரமாம் (அதிஷ்டானமாம்).

எது மயக்ககாலத்துத் தோன்றுன்றதோ, தெளிவுக் காலத்துத் தோன்றுவதில்லையோ அது ஆரோபமாம்.

ஈண்டு 'இது' என்பது பொதுப் பகுதியும் (சாமான்ய அம்சமும்) கயிறென்பது உண்மைச் சிறப்புப் பகுதியும் (யதார்த்த விசேஷ அம்சமும்) பாம்பென்பது கற்பனைச் சிறப்புப் பகுதியுமாம். (கற்பித விசேஷ அம்சமாகும்).

இங்ஙனமே, தன்னை அறியாமையினால், தன்னிடத்தில் தோன்றிய உடல் வடிவ உலகம்'நான் மனிதன்','நான் அந்தணன்' என்றற்றெடேத்தக்கனவாக உணரப்படுகின்றது; தன்னை அறிந்த போது 'நான் சிவம்' என்ற உண்மை உணரப்படுகின்றது. ஈண்டு 'நான்' என்பது சம ஆதாரமும், 'சிவம்' என்பது விசேட ஆதாரமும், 'உலகம்' என்பது ஆரோபமும் ஆம். சிவம்,உலகமாகிய கற்பனைக்கு இடமாக (அதிஷ்டானமாக) இருத்தலின், அது விசேட ஆதாரமாம். 'நான்' என்னும் சம ஆதாரமும், 'சிவன்' என்னும் விசேட ஆதாரமும் ஒன்றேயாய் இருப்பினும், 'நான்' என்பது 'நான் சீவன் என அறியாமைக் காலத்திலும், 'நான் சிவம்' என அறிவுக்காலத் திலும் விளங்குவது பற்றியும்,சிவம் என்பது அறியாமைக் காலத்துத் தோன்றாது அறிவுக் காலத்துத் தோன்றுவது பற்றியும் இவ்விரண்டிற்கும் வேற்றுமை கற்பித்துக் கூறப்பட்டது.

## மறைப்பாற்றல் பற்றிய ஐயம்(2)

ஈண்டு மற்றோர் ஐயம் எழல் இயல்பு. ஜீவப் பிரஹ்ம ஐக்கிய நிலையை விளங்காதவாறு மறைத்துக் கெடுத்தது, அன்னமய கோசம் முதலிய பஞ்சகோசமும், அவற்றிற் பற்றுடையோ

னாகிய சிதாபாச (ஜீவ)னும், ஆகாயம் முதலிய உலகுமாய் உண்டான விட்சேப சத்தியல்லவா ? அங்ஙனம் கொடிதாயுள்ள விட்சேப சத்தியை நிந்தியாது, ஆவரண சத்தியானது ஞான திருஷ்டியைக் குருடாம் வண்ணம் மறைத்துப் பாழாக்கிற்றென்றும், பிறவிப் பிணியை உண்டாக்கும் உபாதியென்னும் அதனை வெறுத்துக் கூறக் காரணம் யாது ?

விட்சேப சத்தியானது, பஞ்சகோசமும், ஜீவனும், சகத்துமாய் உண்டாயிருத்தலால், அஃது விவேகிகட்குத் துன்பத்தைத் தரும் பிறவிக்குக் காரணம் ஆயினும், தமது முயற்சியால் முத்தியை அடைய விரும்பும் பகுத்தறிவுடையவர்கட்குக் குருவாகவும், நூலாகவும் அது கருவியாய் உதவும். ஆதலால், விட்சேபமென்னும் தோற்ற ஆற்றல் யாருக்கும் கெடுதி தருவதன்றாகும். யாவருக்கும் முயற்சியை உண்டு பண்ணும் பகற்காலம் போல, இராக் காலத்தால் அவர்கட்குப் பயன் உண்டாகின்றதா ? இல்லையே !

மேலும், உறக்க காலத்திலும் பேரூழிக் காலத்திலும் விட்சேப வடிவ உலகம் அழிகின்றது. அப்போது யாரேனும் முத்தி அடைகின்றனரா ? இல்லையே ! எனவே, குருநூல் வடிவமாக விட்சேப சத்தியானது, முத்தியடையச் செய்யும். ஆவரண சத்தியோ, அவ்வாறாகாது, வித்தில் முளைபோலச் சீவர்களிடத்தி லிருந்து அவர்களை முத்தியடையாதவாறு செய்தலின், ஆவரணம் என்றாம் மறைப் பாற்றலே மிகவும் கொடியதாகும்.

"கிளிஞ்சலில் வெள்ளி போலப் பிரஹ்மத்தினிடத்தில் தோன்றிய விட்சேப சத்தி மித்தையாதலின், அச்சத்தி (குருநூல் முதலிய) வாயிலாக வந்த முக்தியும் அச்சத்தி போல மித்தையே யாகுமன்றோ ? எனின், மித்தியாவடிவ உறக்கத்தில் கண்ட புலி முதலிய விலங்குகளால் உறக்கம் தெளிந்தவிடத்து உறக்கத்தின் இன்மை வடிவமான (அபாவ வடிவமான) விழிப்புச் சத்தியமாவது போல, மித்தையாகிய விட்சேப சத்தி குரு நூல்கள் முதலியவற்றால் உண்டாகும் முத்தியும் சத்தியமாம் என்று உணர்தல் வேண்டும்.

இதுகாறும், கற்பனை என்னும் அத்தியாரோபம் உண்டான முறைமை விளக்கமாகக் கூறப்பட்டது. இந்தக் கற்பனையால் தான் மக்கட்குத் தளையுண்டாம். காண்பன எல்லாம் மித்தையாம் என்று உள்ளவாறு தெளிந்தால், கட்டு நீங்கி விடுதலை பெறலாம்.

# மலைவாழ் மக்களின் மொழி – கூவிமொழி

டாக்டர். மோ. இசரயேல், எம். ஏ., பி எச் டி.,

1971 ஆம் ஆண்டுக் குடிமதிப்பு அறிக்கையில் நம் இந்திய நாட்டில் 1652 மொழிகள் பேசப்படுகின்றனவாகக் குறிக்கப்படுகின்றது. இம்மொழிகளில் பல மலைகளில் சிறு சிறு கூட்டத்தாராய் வாழ்கின்ற பழங்குடி மக்களால் பேசப்படுகின்றவை.

ஒரிசா மாநிலத்தின் மலைக்காடுகளிலும் ஆந்திர மாநிலத்தின் வட எல்லையில் உள்ள மலைப்பகுதிகளிலும் வாழும் பழங்குடி மக்களால் பேசப்படும் மொழிகளில் கூவிமொழியும் ஒன்று. 1971ஆம் ஆண்டுக் குடிமதிப்பு அறிக்கையின்படி இம்மொழியை 195, 409 பேர் பேசுகின்றனர். இவர்களில் நூற்றுக்கு 86 பேர் ஒரிசா மாநிலத்திலும், 13 பேர் ஆந்திராவிலும், எஞ்சிய சிலர் அண்மை மாநிலங்களிலும் வாழ்கின்றனர். ஏறத்தாழ நூற்றுக்கு 47 பேர் ஒரிசாவின் கோராபுட்டு (Koraput) மாவட்டத்தில் மட்டுமே வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூவிமொழி திராவிட மொழிக்குழுவைச் சார்ந்தது. கூவி, கூயி, கூபி என்னும் சொற்கள் திராவிடக்குழுவில் மூன்று வேறுபட்ட மொழிகளைச் சுட்டுவன. பல்லாண்டுகளாகக் கூவிமொழி கூயி மொழியின் வட்டார வழக்குகளில் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. 1961-ஆம் ஆண்டுக் குடிமதிப்பு அறிக்கையில் இம்மொழியின் பெயர் இதனைப் பேசுகின்ற கோந்த் அல்லது கோண்ட் என்று அழைக்கப்படும் இனத்தவரின் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது. கூயிமொழி பேசுகின்றவர்களும், கோந்த், கோண்ட் என்னும் இப் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றனர். கூபி என்னும் சொல் கோண்டா மொழியைக் குறிப்பதாகும். இம்மூன்று மொழி பேசுகின்ற மக்களும் ஒரே தொடர்புபட்ட பகுதிகளில்தான் வாழ்கின்றனர். 'கூ' என்ற சொல்லுக்கு மலை என்பது பொருள். எனவே கூயி, கூவி, கூபி என்பன மலைமொழியையும் இனத்தவரையும் குறிப்பன. கூவிமொழி பேசுவோர் தங்களைக் கூயிங்கா எனவும் கூவிமொழியினர் கூவிங்கா, கூவிங் என்ற சொற்களாலும் கூபி மொழியினர் கூபிங் என்ற சொல்லாலும் அழைப்பர். இவற்றுள் கூயி-கூவி ஆகிய இரண்டு மொழிகளும் பல இயல்புகளின் ஒற்றுமை அடிப்படையில் ஒரு துணைக்குழுவினவாகக் கொள்ளப்படுகின்றன. எனினும் இவை இரண்டும் தனித்தனி மொழிகளே.

கூவிமொழி பற்றிய குறிப்பு கால்டுவெலின் ஒப்பிலக்கண நூலிலும், கிரியர்சனின் LINGUISTIC SURVEY OF IDAIA என்னும் இந்தியமொழிகளின் வழக்கு அளவீட்டு நூலிலும் இல்லை. 1961 ஆம் ஆண்டுக்கு முந்திய குடிமதிப்பு அறிக்கைகளிலும் இல்லை. ஆனால் இப்பொழுது இது திராவிடமொழியியல் அறிஞராலும் பிறராலும் தனி ஒருமொழி என அறியப்பட்டு, ஒப்பிலக்கணத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

கூவிமொழியினைத் தனி ஒரு மொழியாகக் காட்டி, அதற்கு முதன் முதல் 1911 – ஆம் ஆண்டில் இலக்கணம் எழுதியவர் செர்மனி நாட்டைச் சார்ந்த சமயத்தொண்டர் சூல்ஸ் ஆவர். அவர் தெலுங்கு மொழி கலந்து பேசப்படும் சலூரைச் சேர்ந்த வட்டார வழக்கை அடிப்படையாகக் கொண்டு தம் நூலை ஆக்கியுள்ளமையான் நூலின் செய்தியிலும் போக்கிலும் பல தவறுகள் ஏற்பட்டன. 1913 – ஆம் ஆண்டில் பிச்கெரால்டு என்னும் அறிஞர் தோட்டக்காடுகளில் வேலை செய்த மக்கள் பேசிய கூவிமொழியை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் எழுதியுள்ளார். 1957 - இல் கோபிநாத் மகந்தி என்பவர் ஒரியா மொழியில் கூவிமொழிக்கு ஒரு இலக்கணம் எழுதிவெளியிட்டுள்ளார். 1957-இல் பரோ, பட்டாச்சாரியா என்னும் அறிஞர்கள் கூவிமொழிக்குக் குறுகிய அளவில் ஒரு விளக்கம் எழுதி வெளியிட்டுள்ளனர். மேலும் அவர்கள் 1964, 1966 ஆகிய ஆண்டுகளில் கூவிமொழி வழங்கும் வேறு சில வட்டார வழக்குகளில் கள ஆய்வு நிகழ்த்திச் சொல் வழக்குகள் சிலவற்றைத் திரட்டியுள்ளனர். இக்கட்டுரையாளர் 1971 - ஆம் ஆண்டு முதல் 1973 வரை நிகழ்த்திய கள ஆய்வின் விளைவாகக் கூவிமொழிக்கு முழு அளவில் இலக்கணமும் அதிராதியும் அமைந்த நூல் ஒன்றினை 430 பக்க அளவில் வெளியிட்டுள்ளார்.

கூவிமொழி பேசுகின்றவர்கள் பெரும்பாலும் மலைகளின் உயர்விடங்களில் வாழ்கின்றமையான் அவர்களுக்கு விற்றல், வாங்கல், அலுவலக வேலைகள் ஆகிய சிலவற்றிற்கல்லது பிற மொழியாளரிடம் தொடர்பு ஏற்படுவதில்லை. அத்தொடர்பு கொள்ளுகின்றவர்கள் பெரும்பாலும் ஆண்களேயாவர். எனவே கூவிமக்களில் ஏறத்தாழ நூற்றுக்கு 32 பேர் மட்டுமே கூவியுடன் ஒரியா அல்லது தெலுங்கு ஆகிய மாநிலமொழிகளில் ஒன்றினையும் பேசுகின்ற இருமொழியாளராய் விளங்குகின்றனர்.

கூவிமொழி பல்வேறுபட்ட வட்டார வழக்குகளை உடையது. எனினும் அவற்றில் மூன்று வட்டார வழக்குகளே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஒன்று வட எல்லை வட்டார வழக்கு. இது

கோராபுட்டு மாவட்டத்தின் காலியசிங்கப்பூர், பிசாம் கட்டக்கு, இராயகாடா ஆகிய தாலுக்காக்களில் வழங்குவது. இங்கு ஸ > ஹ எனவும், எ > அ எனவும் உ > ஒ ஆகவும், மொழி இடை மெய் யொலியக்கூட்டு, மொழி முதல் மெய்யொலியக்கூட்டாகவும் நீனு என்னும் முன்னிலை யொருமைப் பெயர் நீவு எனவும் திரிந்து வழங்குகின்றன. மேலும் இதில் கூயி மொழியின் தாக்கம் மிகுதி யாக உள்ளது. இரண்டாவது நடு எல்லை வட்டாரவழக்கு தசமந்தப்பூர், இலட்சுமிபூர், நாராயணப்பட்டண ஆகிய தாலுகாக் களில் வழங்குவது. இதில் வினைச்சொல் விகுதிகளில் சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. மூன்றாவது தென் எல்லை வட்டார வழக்கு. செம்பிலிகுடா, பொத்தாங்கி, கோராபுட்டு, ஜெய்ப்பூர் தாலூகாக்களிலும் ஆந்த்ர மாநிலத்தின் வடபகுதியிலும் வழங்குவது. இதில் தெலுங்குச் சொல் கலப்பு மிகுதியாக உள்ளது.

திராவிட மொழிகளில் ஒன்றாகிய இம்மொழிக்கண் தமிழ் போன்ற தென்திராவிட மொழிகளினின்று வேறுபட்ட சில இயல்புகள் காணப்படுகின்றன. கூவிமொழியில் ? என ஒலிக்கும் குரல்வளைத்தடையொலியும் (glottal stop) h என்னும் குரல்வளை உரசொலியும் (glottal fricative) s என்னும் முன் அண்ணவின உரசொலியும் உள்ளன. இம்மொழி இடம் பெயரலால் மொழி முதலில் மெய்யொலியக் கூட்டு (consonantal cluster) அமைந்த சொற்கள் பலவற்றை உடையது. எ-டு trayu(தலை).prenu(எலும்பு)

இது மொழி இடையில் மும்மெய் ஒலியக்கூட்டு அமையும் சொற்கள் சிலவற்றை உடையது. எ-டு Kandru, inmbu, Kandru.

ஒரு சில கடன்சொற்கள் தவிரக் கூவிமொழியின் பெரும் பாலான சொற்கள் உயிரீறு பெற்று அமைகின்றன. எ-டு பல்லு, கன்னு, இல்லு, கட்டேலி, காயு.

கூவிமொழியில் ஒருமை ஆண்பால், பன்மை ஆண்பால், ஒருமை ஆணல்பால், பன்மை ஆணல்பால் என்ற நால்வகைப்பால் வேறுபாடுகள் உள்ளன. எனவே, பெண்பால், அஃறிணையுடன் சேர்ந்து ஆணல்பாலாக (non-masculine) மொழியில் வழங்கு கின்றது. எனவே, இம்மொழியில் பெண்பாலுக்கும் ஒன்றன் பாலுக்கும் வேறுபாடு இல்லை.

அஃறிணைப்பன்மை எல்லாவிடங்களிலும் பன்மைக் குறியீட் டினைப் பெற்று வழங்குகின்றது. எ-டு பல்லு-பல்கா, இல்லு-இல்கா, வல்லி-வல்கா, கன்னு-கண்கா.

முன்னிலை ஒருமையில் நீனு என்னும் வடிவம் ஆட்சி பெற்றுள்ளது. தானும் தாமும் முழுஅளவில் படர்க்கைப் பெயர்களாக ஆட்சி பெற்றுள்ளன. தமிழில் சுட்டுக்கள் அ, இ, உ, என மூவகை வேறுபாட்டுடன் அமைய, கூவி மொழியில் சுட்டுக்கள் ஐவகை வேறுபாட்டுடன் அமைதலைக் காணலாம். சுட்டுக்கள்.

i ivasi (இவன்) e evasi (அவன்) u uvasi (அவன் - சேய்மையிலுள்ளவன்) he hevasi (அவன் மிகச்சேய்மையன்) hu huvasi(அவன்-நெடுந்தொலையினன்) என்னும் வேறுபாடுகளையுடையன.

கூவிமொழியின் வினைச்சொல் அமைப்பில் சில புதுமைகள் காணப்படுகின்றன. இதே வகையான அமைப்புகள் கூயி, பொங்கோ ஆகிய மொழிகளிலும் உள்ளன. செயப்படுபொருள் அல்லது கொடைப்பொருளின் இடவேறுபாடுணர்த்தும் சிறப்பு வினையடிகள், பன்மைச்செயல் (plural action) உணர்த்தும் வினையடிகள், இடப்பெயர்வுடன் இருசெயல் உணர்த்தும் வினையடிகள் ஆகியன கூவி மொழியில் உள்ளன.

முதல்வகையான சிறப்புவினையின் அடியினை hitesi hiyatesi என்னும் இரு சொற்கள் வாயிலாகக் காணலாம். hitesi என்றால் அவன் கொடுத்தான் எனவும் hiyatesi என்றால் அவன் எனக்குக் கொடுத்தான் எனவும் பொருள்தரும்.

பன்மைச்செயல்வினையடி, பன்முறை, திரும்பத்திரும்ப, அழுத்தமாக, அன்றேல் தொடர்ச்சியாகச் செய்யும் செயல்களை உணர்த்தப்பயன்படுகின்றது. எடுத்துக்காட்டாக kothesi எனின் கொத்தினான் என்பதையும் kotpitesi எனின் தோண்டினான் என்பதையும் குறிக்கின்றது. அதுபோல hupitesi எனின் துப்பினான் எனவும் hipkitesi என்றால் வாந்தி பண்ணினான் எனவும் பொருள்படும்

மேலும் himu 'கொடு' எனப்பொருள்தர hikamu 'போய்க் கொடு' எனவும் tinamu 'தின்' எனப்பொருள்தர tingamu 'போய்ச்சாப்பிடு' எனவும் பொருள்தரக்கூடிய இடப்பெயர்வுடன் இருசெயல் உணர்த்தும் வினையடிகளும் கூவி மொழியில் இடம் பெறுகின்றன.

கூவிமொழியில் வினைச்சொற்கள் உருபன் அடிப்படையில் இறப்பு, இறப்பன்மை (past vs. non-past) என இருகாலவேறுபாடு களை மட்டும் உணர்த்துகின்றன. நிகழ்காலத்தையும், எதிர் காலத்தையும் ஒரே வடிவமே உணர்த்துகின்றமை அறியத்தக்கது.

vātesi 'வந்தான்' vānesi வருகிறான் வருவான் ticesi 'தின்றான்' tinesi தின்கிறான்

கூவிமொழியில் மகரம் ஏவற்பன்மையிலும் தகரம் ஏவல் ஒருமையிலும் விகுதிகளாக அமைகின்றன.

vāmu 'வா' vādu 'வாருங்கள்' hīmu 'கொடு'

hīdu 'கொடுங்கள்'

இவ்வாறாக, கூவிமொழி பேசுகின்ற மக்கள் வாழிடம், தொகை, அம்மொழி பற்றிய ஆய்வுகள், அம்மொழியின் சில இயல்புகள் பற்றிக் கண்டோம். அம்மொழியின் செய்திகள் திராவிடமொழி களின் ஒப்பியல் ஆய்விற்கும், அதனைப்பேசும் மக்களின் இன்றைய வாழ்வு பண்பாடு, திராவிடர்களின் பண்டைக்கால வாழ்வு, பண்பாடு ஆகியவற்றிற்கும் விளக்கங்களாக அமைதலோடு அவற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் துணைநிற்கின்ற.

# தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

## இதழ் வெளியீடுகள்

செய்தி மலர் –திங்களிதழ்　　தமிழ்க்கலை –முத்திங்களிதழ்
News Bulletin–திங்களிதழ்　　Tamil Civilization–முத்திங்களிதழ்

## கட்டண விவரம்

திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | உ ரூ. 5 | 4 தாலர் |
| மூன்றாண்டு | உ ரூ. 12 | 10 தாலர் |

முத்திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | உ ரூ. 50 | 10 தாலர் |
| ஐந்தாண்டு | உ ரூ. 200 | 40 தாலர் |

| | நூல்கள் | பக்கம் | உரு. |
|---|---|---|---|
| 1. | தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 | | |
| | புலவர் செ. இராசு | 356 | 150 |
| 2. | கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரையுடன்) | | |
| | இ வை. அனந்தராமையர் அடிக்குறிப்புடன் | 1228 | 150 |
| 3. | சங்க இலக்கியக் கட்டுரைகள்–கருத்தரங்கம் | 234 | 30 |
| 4. | ஆராய்ச்சித் தொகுதி | | |
| | மு. இராகவையங்கார் | 551 | 100 |
| 5. | தொல்காப்பியம்-சொல்லதிகாரம் | | |
| | தெய்வச்சிலையார் உரை | 324 | 60 |
| 6. | தொல்காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம் | | |
| | பேரா. க. வெள்ளைவாரணர் | 474 | 75 |
| 7. | நன்னூற் காண்டிகையுரை | | |
| | ஆறுமுக நாவலர் பதிப்பு | 398 | 65 |
| 8. | பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும் | | |
| | டாக்டர் தெ. ஞானசுந்தரம் | 688 | |
| | நூலகப்பதிப்பு | | 180 |
| | பொதுப்பதிப்பு | | 130 |
| 9. | நீலகேசி (உரையுடன்) | | |
| | பேரா. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு | 848 | 140 |
| 10. | சட்டவியல் | | |
| | பேரா. மா. சண்முகசுப்பிரமணியம் | 416 | |
| | நூலகப்பதிப்பு | | 92 |
| | மாணவர் பதிப்பு | | 36 |
| 11. | தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் | | |
| | பேரா. கே. எம். வேங்கடராமையா | 564 | 155 |

விற்பனைக் கழிவு :- அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும் படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க :- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-613 001.

## பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

2. பேராசிரியர், க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

3. சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

4 டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

5. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட்., பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

6 பேராசிரியர் ச. பாலசுந்தரம்,
பதிப்பாசிரியர், தமிழ்ப்பொழில்.

7. பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமரர்சர் பல்கலைக் கழகம்.

9. புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

10. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமா மகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

11. திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

Regd. No. TN/TJ/17.

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| யாழ் நூல் — விபுலானந்த அடிகள் | ரூ | 50 | 00 |
| கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்) | ரூ. | 30 | 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. | 60 | 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ் | ரூ. | 6 | 00 |
| கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ | 4 | 00 |
| நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. | 3 | 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா வே. மாணிக்க நாயக்கர் | ரூ. | 2 | 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. | 1 | 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. | 0 | 62 |
| சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம் | ரூ. | 0 | 25 |

பிற வெளியீடுகள் :

| | | | |
|---|---|---|---|
| கலைக்கூத்தன் கவிதைகள் | ரூ. | 6 | 00 |

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள் நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 00 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 20 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்–613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌளி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.